


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 10, இதழ் - 3, மே - ஜுன் 2024



R4759

## MELCHISEDEC AND AARON AS TYPES
## நிழல்களாக மெல்க்கிசேதேக்கும் ஆரோனும்

உண்மையில் பிரதான ஆசாரியராக ஒரே ஒரு ஆசாரியரே இருந்தார். உதவி ஆசாரியர்கள் பிரதான ஆசாரியனுக்கு வெறும் பிரதிநிதிகளாக மட்டுமே இருந்தனர். மகா ஆசாரியராகிய இயேசுவுடன் எதிர்காலத்தில் இதே போல இருக்கும். கர்த்தர் தலையானவராகவும் உதவி ஆசாரியர்கள் அவரது அங்கங்களாகவும் “திரள் கூட்டத்தார்” இந்த மகா ஆசாரியருக்கு ஊழியர்களாகவும் இருப்பார்கள்.

உலகத்திற்கான தேவனுடைய வேலை எதிர்காலத்திற்கு உரியது. ஆசாரியத்துவத்தையும், மகா ஆசாரியர், அவரது அங்கங்கள் மற்றும் அவரது ஊழியக்காரர்களுக்கு மேசியாவின் ஆயிர வருட அரசாட்சியில் மனுக்குலத்திற்கு போதித்து, சுகப்படுத்தி உயர்த்துகிற வேலைக்காக தகுதியை வழங்குகிற வேலை நிறைவடையும்.

சுவிசேஷ யுகத்தில் தலையும் மற்றும் அங்கங்களாகிய மகா ஆசாரியர் தயாராவதற்கு, அவர்களது பலி அவசியமாயிருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறேன்.” தலையானவரின் பலி பிரியமானதாக இருந்தது. ஏனெனில் அவர் பூரணராயிருந்தார். பின்னர் அவர் சமர்ப்பித்த, அவரது அங்கங்களின் பலிகள் அனைத்தும் இதே போல பிதாவானவருக்கு பிரியமானதாக இருக்கின்றன. ஏனெனில் பிரதான ஆசாரியரின் பலியின் புண்ணியம் மற்ற பலிகளுக்கு சாட்டப்படுகின்றன.

### ஆரோனின் ஆசாரித்துவம் மெல்க்கிசேதேக்கின் ஆசாரித்துவத்திலிருந்து மாறுபட்டது

வேத வாக்கியங்களில் ஆரோன் மற்றும் மெல்க்கிசேதேக்கின் ஆசாரித்துவம் என்று இரண்டு ஆசாரித்துவம் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டுமே தலையாகிய கிறிஸ்துவையும் அவரது சரீரத்தையும் நிழலாக காட்டுகின்றன. ஆரோனின் ஆசாரியத்துவம் பலியை மட்டும் சித்தரித்து, மகிமை மற்றும் ஆளுகையைப் பற்றி ஒன்றும் கூறுவதில்லை. அவரது ஆடை மட்டுமே அதை அடையாளப்படுத்துகிறது. மெல்க்கிசேதக்கின் ஆசாரியத்துவம், கிறிஸ்து மற்றும் அவரது சரீர அங்கங்கள் அனைவரின் பலியும் முடிந்தபிறகு வரும் எதிர்காலத்துக்குரியதை மட்டுமே குறிப்பிடுகிறது.

இந்த இரண்டு கருத்துக்களிலிருந்து ஆசாரியரின் வேலை பார்க்கப்பட வேண்டும். ஒரு அர்த்தத்தில் அவரது பலி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் அவரது எதிர்கால வேலை எல்லாம் இந்த பலிகளை அடிப்படையாக கொண்டே இருக்கிறது. ஆனால் இன்னொரு அர்த்தத்தில் பலிகளையெல்லாம் எதிர்காலத்தில் வரப்போகிற மாபெரும் வேலைக்கு வெறும் ஒரு முன்னேற்பாடாகும். முதலாவது ஆசாரியன், ஆசாரிய வேலைக்கும் மகிமைக்கும் உயர்த்தப்பட பாத்திரவானாக ஆவதற்கு பலியை கொடுக்க வேண்டும். இரண்டாவதாக அந்த பலியின் புண்ணியத்தை பெற வேண்டும். அதன்மூலம் உலகத்தின் பாவங்களுக்காக நீதிக்கான பாவ நிவர்த்தி செய்ய வேண்டும். அதன் மூலம் அவர் மகிமையடைந்த ஆசாரியனாக, தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் மத்தியஸ்தராக நிற்பதற்குரிய முழு உரிமையை பெறக்கூடும். அவர் சிங்காசனத்தில் ஒரு ஆசாரியராக, மெல்க்கிசேதேக்காக அவரது ஆயிர வருட யுக ராஜ்யத்தில் மனுக்குலத்தை உயர்த்தி ஆசீர்வதிப்பார்.

மேசியா, மெல்க்கிசேதேக்கின் முறைமையின்படிதான் ஒரு ஆசாரியர் என்றும் ஆரோனின் முறைமையின்படி அல்ல என்றும் அப்போஸ்தலர் அறிவிக்கிறார். (எபிரேயர் 7:21) ஏனெனில் அவர் பூமியில் இருந்தால், ஆசாரியராக இருக்க முடியாது. ஏனெனில் இயேசு, லேவியின் கோத்திரத்தில் பிறக்காமல், யூதாவின் கோத்திரத்தில் பிறந்திருந்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரிய ஊழியம் என்றென்றைக்குமாக ஆரோனுக்கும் அவனது குமாரர்களுக்கும் மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆரோனும் அவனது குமாரர்களும் மேசியாவின் ஆசாரியத்துவத்திற்கு முன்னேற்பாடான அம்சத்தை, பலியின் முன்னேற்பாட்டை நிழலாக காண்பிக்கிறார்கள். ஆகையால் ஆசாரியராக மேசியாவின் உரிமைகோரல் ஆரோனின் ஆசாரித்துவத்தின்படியல்ல. ஏனெனில் வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: “நீர் மெல்க்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலும் இருப்பார்.”(சங்கீதம் 110:4; எபிரேயர் 7:20) இங்கே ஆசாரியராக குறிப்பிடப்பட்டது சுவிசேஷ யுகத்தின் முடிவில் தலையும் சரீரம் சேர்ந்த மகிமையடைந்த மேசியாவையாகும். அப்பொழுது அர்ப்பணமும் பலியிடுவதும் முடிவடைந்து உலகின் மனுக்குலத்திற்கு ஊழியம் செய்யும் மகிமையின் ஆசாரிய ஊழியம் ஆரம்பமாகும்.

R4759

## TAKING HEED TO OUR HEARTS

## நமது இருதயத்தை கவனித்தல்

"சகலவிதமான கசப்பும். கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. " எபேசியர் 4:31

இந்த துர்குணங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கிறதாகத் தெரிகிறது. பொதுவாக இது ஒன்றையொன்று பிறப்பிக்கிறது என்று அனுமானிக்கப்படுகிறது. அப்போஸ்தலர் ஒரு இடத்தில் கசப்பின் வேரை எழும்பப்பண்ணுகிற ஆபத்து இருக்கிறது என்றும் அதன்மூலம் அநேகர் களங்கம் அடைகிறார்கள் என்றும் கூறுகிறார். இந்த மாதிரி காரியங்களால் இப்படிப்பட்ட கசப்பின் வேரிலிருந்து எப்படி அசுத்தம் வளர்ச்சியடைகிறது என்பதையும், இப்படிப்பட்ட வேரை வளர அனுமதிப்பதால் தீமையான பலன் என்ன என்பதையும் அவர் குறிப்பிடுவதாக தெரிகிறது. கசப்புத்தன்மை சுத்தமான தண்ணீருக்கு அல்ல, உப்புத் தண்ணீருக்கு, காரத்தன்மையுள்ள, சுவையற்ற தண்ணீருக்கு ஒப்பிடப்படுகிறது. நமது வசனத்தில் முதலாவது இருதய நிலைமையை குறிப்பிடுவதாக தெரிகிறது. ஆகையால் நீரூற்று மாசடைந்தால், அல்லது அசுத்தமடைந்தால் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகள் அசுத்தமாயிருக்கும், உப்பாயிருக்கும்.

நமது இருதயத்தை கவனிக்க வேண்டும் என்ற கருத்து தெரிகிறது. பெருந்தன்மையற்ற உணர்வை பெறுவது அல்ல. அப்படி அது ஊடுருவினால், தொற்றும் தன்மை கொண்ட எதையும் நாம் எதிர்ப்பது போல, அது உடனே எதிர்க்கப்பட வேண்டும். ஒருவரிடத்தில் கோபத்தை மாத்திரமல்ல, குறைகூறும் மனோபாவத்தையும் அல்லது ஒருவரது செயலில் குற்றம் காணுதலையும் ஆவியின் கசப்பு ஒவ்வொன்றையும் நாம் எதிர்க்க வேண்டும். இந்த இடத்தில் நமது இருதயத்தைக் கவனிக்க வேண்டும். கசப்பின் ஆவிக்கு இடம் கிடைத்தவுடனேயே அந்த நபரின் அனைத்து தவறுகளும் மிகைப்படுத்தப்பட்டு எல்லா நல்ல குணங்களும் மறக்கப்படும். அதன்பிறகு கோப உணர்வும் எதிர்க்கும் ஒரு கசப்பான ஆவியும் வரும். கோபத்தின் உணர்வை நீடித்து உடனே அந்த தனிப்பட்ட நபரை வெறுப்பதற்கு வழி நடத்தும்.

அந்த நபர் கோபத்தை மட்டும் உணராமல், வெறுப்பதற்கான உணர்வை வளர்க்கும். ஒரு கசப்பு உணர்வை வளர்க்கும். அது அதிக தீங்கு விளைவிக்கக் கூடியதாக அபிவிருத்தி அடையும். அடுத்து அந்த நபரைப் பற்றி தீமையாக பேசக்கூடிய மனநிலை வரும். இயற்கையாகவே ஜனங்கள் வெறுக்கிறவர்களை நேசிக்க மாட்டார்கள். அதன்பிறகு பொறாமை, ஒரு வெறுப்பு உணர்வு வருகிறது. தீமையான மொழிகளை பேசக்கூடிய விருப்பம் மாத்திரம் அல்ல, காயப்படுத்துவதற்கான விருப்பத்தையும் அடைந்த, அவர்களுக்கு சில காயம் ஏற்பட்டால் அதனால் சந்தோஷத்தை உணரும் நிலைமையும் வருகிறது. இப்படியாக தீமை செல்கிறது.

### வேதவாக்கியங்கள் ஒரு கண்ணாடி

நம்மைக்குறித்த ஒரு சீர்த்திருத்தலுக்கு நம்மைப் பற்றிய ஒரு சரியான பார்வை மிகவும் அவசியமாக இருக்கிறது. நாம் பலமின்றி இருப்பதை நம்மை நாமே பார்க்கும் வரை, தேவனுடைய குமாரனுடைய புண்ணியத்தினால் நம்மை ஒப்புரவாக்க நம்மை அவரிடம் இழுக்கும். அவரது மகா கிருபையை நாம் உணரவில்லை. வேத வாக்கியங்கள் தான் கண்ணாடி. நாம் ஒவ்வொரு நாளும் கண்ணாடிக்குள் பார்த்து, நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை காண்பது சரியானதாக இருக்கும். "எங்களுக்கு எதிராக பாவம் செய்தவர்களை நாங்கள் மன்னிக்கிறதைப் போல எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என்பது நமது கர்த்தரின் ஜெபம்.

நாம் சரியான மனோபாவத்தில் இருக்க வேண்டும். மிகவும் பெரிதான யோசனை என்னவென்றால், நான் யாருக்கு விரோதமாக அத்துமீறி இருக்கிறேனா அல்லது யாராவது எனக்கு விரோதமாக அத்துமீறி இருக்கிறார்களா, இதற்கு போதுமானதை செய்ய வேண்டும். மன்னியாதிருக்க காண்போமானால் அந்த மனோபாவத்தை நாம் நீக்க வேண்டும், வேரறுக்க வேண்டும். நீக்கப்பட வேண்டியது கசப்புத்தன்மையின் வேர் மாத்திரமல்ல, அப்படிப்பட்ட உணர்வின் ஆரம்பம் அறிகுறிதோன்றும் போதே கவனித்து நீக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு இருதய நிலைமைக்குள் வந்திருக்கிறதை யாராவது ஒருவர் கண்டால், இதைக் குறித்த தேவனுடைய பார்வை என்னவாக இருக்கும் என்பதை அவர் நினைத்து பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட மனோபாவத்தை உடையவர்களிடம் தேவன் அன்பு செலுத்துவது எவ்வளவு இயலாததாக இருக்கும்! தேவனை உண்மையிலேயே நேசிக்கிற யாரும், தேவனுடைய வார்த்தையாகிய பார்க்கிற கண்ணாடி மூலம் கிடைக்கிற சித்திரத்தின் மூலம் அதிர்ச்சி அடைவார். அவர் உடனே தவறு செய்தவரிடம் சென்று மன்னிப்பு கேட்பார். தவறு கோபத்தினாலோ அல்லது கெட்ட பேச்சினாலோ வந்திருந்தால் இது மேற்கொள்ளப்பட வேண்டும், நீக்கப்பட வேண்டும். காரியம் இந்த அளவுக்கு சென்றிருந்தால், அதை யாரும் அறியாதிருந்தால் இதுவே முடிவாக இருக்கும்.

கோபமும் கசப்பும் ஒழுங்குக்கு முற்றிலும் அப்பாற்பட்டது. ஆகையால் மாம்சமானது ஏதாவது ஒருவழியில் தாழ்மைப்படுத்தப்பட வேண்டும். உதாரணத்திற்கு, ஒருவர் இன்னொருவருக்கு விரோதமாக கசப்பாக நடந்து கொண்டால், பிந்தியவரிடம் அவர் உங்களைக் குறித்து கசப்பாக நினைத்திருந்தார், நீங்கள் தேவனிடம் விட்டு விடுங்கள் என்று சொல்ல வேண்டும். சிலர் தங்களை நீதியில் திருத்தப்பட ஒப்புக்கொடுக்காமல் தவறு செய்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். "நல்லது, நான் இதை நிறுத்திவிடுவேன், மறுபடியும் இதைச்செய்ய மாட்டேன்" என்று அவர்கள் கூறலாம். அது செய்யப்படும் போது, மாம்சமானது வளர்க்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டது என்று நாங்கள் கருதுகிறோம். தங்களைத் தொடர்ந்து கவனித்து, நிதானித்தால் அவர்களுக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் வருகிறது. அப்போஸ்தலர் கூறுவது போல, "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்." (1கொரிந்தியர் 11:31)

இந்த காரியத்தைக் குறித்து ஒரு கதை நமது நினைவுக்கு வருகிறது. ஒரு மனிதன் காலையில் வண்டியில் சென்று கொண்டிருந்தான். அவன் சாலை ஓரத்தில் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்து, "இந்த மனிதனுக்கு இருபத்தி ஐந்து சென்ட் கொடுப்பேன். ஏனெனில் இது கிறிஸ்துமஸ் காலை" என்று கூறினான். மறுபடியும் அவன் "நான் கொடுக்கமாட்டேன், ஒரு பென்னிதான் கொடுப்பேன்" என்று எண்ணினான். அவன் எப்படி இருந்தான் என்பதை நினைத்துப் பார்த்த போது இந்த எண்ணம் வந்தது. கால் டாலர் கொடுக்கலாம் என்று நினைத்த போது அவனது பெருந்தன்மையான எண்ணத்தை அனுமதித்திருந்தான்.

பிறகு அவன் தனக்குத்தானே கூறிக்கொண்டதாவது: "நான்கு மடங்காக அவனுக்கு ஒரு டாலர் கொடுக்கலாம்."ஆகையால் அவன் ஒரு டாலரைக் கொடுத்தான். எழுபத்தைந்து சென்ட் அதிகப்படியாக அவனைவிட்டு சென்றது.

இதே கொள்கையை அல்லது விளக்கத்தைப் பயன்படுத்தி, தங்களை தாங்களே நிதானிக்க வேண்டும் என்று கர்த்தருடைய ஜனங்களுக்கு மிகவும் அறிவுறுத்தப்பட வேண்டியது என்று நாங்கள் நம்புகிறோம். நமது கத்தோலிக்க நண்பர்கள் சொல்லுவது போல அல்ல, அவர்கள் கூறுவதாவது: "நீ போய் மணிக்கணக்காக ஜெபி" அல்லது "துன்பம் தருகிற ஆடையை அணிந்து கொள்," அல்லது "உன் முதுகை சாட்டையால் ஒரு அடி அடித்துக்கொள்." நாம் பகுத்தறிவுக்கு இசைவாக நிதானிப்பது மிகவும் ஞானமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட வகையான நோன்பு ஏற்புடைய கனிகளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

**R4760**

## INTERESTING QUESTIONS
## ஆவலை தூண்டும் கேள்விகள்

**கேள்வி:** ரோமர் 5:18இல் நாம் வாசிப்பதாவது: "ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது போல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." எப்பொழுது எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் தீர்ப்பு உண்டாகும்?

**பதில்:** இந்த சுவிசேஷ யுகத்தில் "விசுவாச வீட்டாரைத்" தவிர்த்து உலகத்திற்கு அடுத்த யுகமாகிய மேசியாவின் யுகத்தில் இலவச கிருபை கிடைக்கும். ஆனால் கிருபையின் பரிசு சபைக்கு குறிப்பிட்ட சில நிபந்தனைகள் இணைந்திருப்பது போல, உலகத்திற்கான பரிசிலும் குறிப்பிட்ட நிபந்தனைகள் இணைந்திருக்கின்றன. நம்முடைய விஷயத்தில் பலியின் சிலுவையை எடுத்துக்கொண்டு நமது தலையானவரை பின்பற்ற வேண்டும். இல்லையென்றால் அது நமக்கு கிடைக்காது. ஆனால் உலகத்திற்கு இந்த யுக முடிவுக்கு பிறகு மகா பிரதான ஆசாரியர் தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றி, இரண்டாவது முறையாக கிருபாசனத்தில் இரத்தத்தை தெளிப்பார். இயேசுவை பொருத்தவரை நீதியின் தேவை அனைத்தையும் நிறைவேற்றுவார்; முழு உலகமும் இரட்சகருக்கு நேராக திருப்பப்படும்.

இந்த மாபெரும் பரிசை உலகிற்கு அளிக்கப்படும் முறையில் பொறுப்பு இணைக்கப்பட்டுள்ளது. முழு சந்தர்ப்பம் அனைவருக்கும் கிடைக்கும் என்று நமக்கு உறுதியளிக்கப்படுகிறது. பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அந்த சந்தர்ப்பம் புது உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு கீழாக இருக்கும். இது முதலாவது பழங்கால பாத்திரர்களுக்கு (பழைய ஏற்பாட்டு விசுவாசிகள்) கொடுக்கப்படும். அவர்கள் புது உடன்படிக்கையின் சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் உடனே பெற்றுக்கொள்ளுவார்கள். அதன்பிறகு "முதலாவது யூதருக்கு" கிடைக்கும். ஏனெனில் அவர்கள் நீண்ட காலமாக அப்படிப்பட்ட இராஜ்யத்திற்காக காத்திருந்தார்கள். அப்படிப்பட்ட ராஜ்யத்தில் நுழையும் போது சந்தோஷமும் ஆசீர்வாதமும் கொடுக்கப்படும்.

எனினும் இது யூதர்களோடு நின்று விடாது. மனுக்குலம் முழுவதும் இந்த ஆசீர்வாதத்தின் சலுகைக்குள் வரும். இப்படியாக ஆபிரகாமின் சந்ததிக்குள் அவர்கள் ஆசீர்வதிப்படுவார்கள். ஆபிரகாமின் சந்ததி உலகத்தை ஆசீர்வதிக்கும் என்பது உண்மையாக இருந்தாலும், ஆவிக்குரிய சந்ததி அனைவரையும் ஆசீர்வதிப்பது குறிப்பாக உண்மையாக இருக்கும். வேத வாக்கியம் கூறுவதாவது: "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்." அவர்கள் புது உடன்படிக்கைக்குக் கீழாக வந்து ஆசீர்வதிக்கப்படுவார்கள். மோசே மத்தியஸ்தராயிருந்து ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை மூலம் யூதர்கள் "நாங்கள் இவைகளையெல்லாம் செய்வோம்" என்று சொன்னவுடனே ஆசீர்வதிக்கப்படவில்லை. அதன் நிபந்தனைக்கு கீழாக தானாக முன் வரும்வரை ஆசீர்வதிக்கப்படவில்லை. அதே போல, புது உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு அதன் நிபந்தனைகளுக்கு இணங்குகிறவர்களுக்கு நித்திய ஜீவன் உறுதிபடுத்தப்படும். அந்த உடன்படிக்கைக்கு கீழ்ப்படிவதின் மூலமே அவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள். அவர்கள் பெறுகிற பரிசு பழைய ஏற்பாட்டு விசுவாசிகளைப் போல உடனடியானதாக இருக்காது. மேசியாவின் ஆளுகையின் ஆயிர வருடத்தில் அவர்கள் கர்த்தருடன் புது உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலம் அது அவர்களுடைய பரிசாகவும் அவர்களால் அடையக்கூடியதாகவும் இருக்கும்.

**கேள்வி :** கீழ்ப்படிகிற உலகத்தாருக்கு நித்திய ஜீவனுக்கான உரிமை அளிக்கப்பட்டு எப்பொழுது அதை பெறுவார்கள்?

**பதில் :** கீழ்ப்படிகிற உலகத்தார் புது உடன்படிக்கையின் நிபந்தனையின் கீழாக நித்திய ஜீவனை பெறுவார்கள். அவர்கள் கீழ்ப்படிய ஆரம்பித்த உடனே அதை பெறுவார்கள். அவர்கள் கீழ்ப்படிகிற விகிதாச்சாரப்படி அதிகமாக இன்னும் அதிகமாக ஜீவனை பெறுவார்கள். முழு ஆயிர வருடமும் உலகிற்கு ஜீவனை கொடுப்பதே நோக்கமாக இருக்கும். அவர்கள் சரியான வழியில் முன்னேறும் போது அதிகமதிகமாக ஜீவனைப் பெறுவார்கள். "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்." (ஏசாயா 28:8)

அது படிப்படியான வேலையாக இருக்கும். அவர்கள் புது உடன்படிக்கையின் நிபந்தனைக்குள் வருவதால் நித்திய ஜீவனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். "இவைகளை செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்." (ரோமர் 10:5) அவர்கள் பிரமாணத்தை கைக்கொள்வதால், அவர்கள் படிப்படியாக பூரணத்திற்கு வருவார்கள். அங்கே மரணம் இருக்காது. அங்கே மரணம் என்ற காரியமே இருக்காது. ஆதாமுக்கு சோதனையும் பரீட்சையும் தேவைப்பட்டடது போல, மத்தியஸ்த ஆளுகையின் முடிவை அடைகிறவர்களுக்கும் தேவைப்படுகிறது. இந்த ஜீவனை தக்கவைத்துக் கொள்ள தகுதியுள்ளவர்கள் தானா என்று சோதிக்கப்படுவார்கள். நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவர்கள் தான் என்று சோதிப்பதற்கு தேவன் பல்வேறு சோதனைகளை அல்லது பரீட்சையை அனுமதிப்பார். அந்த சோதனையில் விழுந்து போகாத அனைவரும் "கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவார்கள்."(யோவான். 3:16)

**கேள்வி :** கிறிஸ்து "திரள் கூட்டத்தாருக்கும்," "சிறுமந்தைக்கும்," பரிகாரியா? அப்படியிருந்தால், மகா ஆபத்தின் நாளில் திரள் கூட்டத்தார் தங்களுடைய வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுக்கும் வரை அவர்களுக்கு பரிகாரியாக இருப்பாரா?

**பதில் :** ஆம், "திரள் கூட்டத்தினர்," முதற்பேரானவர்களின் சபையின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள். நிழலில், "கடந்து போகப்பட்டவர்கள்" சபையின் முதற்பேறானவர்கள் முழு

லேவி குடும்பத்தையும் குறிப்பிடுகிறார்கள். ஆட்டின் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டவர்கள் இஸ்ரயேலின் முதற்பேறானவர்களின் இடத்தை எடுத்துக் கொண்டார்கள். மெய்யான ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் நமது வஸ்திரத்தை கறைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்." மத்தியஸ்தர் ராஜ்யத்தை எடுத்துக்கொள்வதற்கு முன்பாக "திரள் கூட்டத்தார்" "மகா ஆபத்தை" கடந்து செல்வார்கள். இப்பொழுது அவர்கள் மத்தியஸ்தர் என்ற வகையில் அவருக்கு கீழாக இல்லை. ஆனால் அவர் இப்போது பரிகாரியின் அலுவலை பெற்றிருப்பதால் அவருக்குக் கீழாக இருக்க வேண்டும்.

"திரள் கூட்டம்" எங்கேயும் பிரித்து சொல்லப்படவில்லை. தற்செயலான வழியில் காக்கப்படுகிறார்கள். உதாரணத்திற்கு ரெபேக்காள், ஈசாக்கின் மணவாட்டியான போது அவளது இரண்டு வேலைக்காரிகளும் குடும்பத்தின் ஒரு பாகமானார்கள். அவர்களைக் குறித்து எந்த குறிப்பும் இல்லை. சபையோடு இணைத்து பார்க்கும் போது, அவளை பின்பற்றி செல்பவர்கள் அவளது தோழிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது குறிப்பாக சங்கீதம் 45இல் விளக்கப்பட்டிருக்கிறது.

### மகா ஆபத்து – பிறகு உயர்த்தப்படுதல்

**கேள்வி:** உபத்திரவம் பெறுகிற அளவுக்கு கர்த்தருடைய பிள்ளைகள் மற்றவர்களைக் காட்டிலும் மோசமானவர்களாகவும் அதிகம் சண்டை போடுகிறவர்களாகவும் அண்டை வீட்டாருக்கு தீமை செய்கிறவர்களாகவும் இருக்கிறார்களா? அல்லது ஏன் கர்த்தர், "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று கூறுகிறார்.

பதில்: தமக்கும் தம்முடைய உண்மையான சீஷர்களுக்கும் உலகத்தில் சோதனை உண்டு, ஏனெனில் "இருளானது வெளிச்சத்தை பகைக்கிறது" என்று கர்த்தர் கூறுவதே இந்த கேள்விக்கு பதிலாக இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். பரிசுத்தவான்களைத் தவிர மற்ற அனைவரும் தீயவர்கள் அல்லது இரக்கமற்றவர்கள் என்று நாங்கள் கூறவில்லை. நன்கு அறிந்தவர் அநேகர் இருக்கிறார்கள் என்று நாங்கள் அறிவோம். தேவனுடைய ஜனங்களுக்கும் உலக ஜனங்களுக்கும் இடையே இசைவின்மை இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. பரிசுத்தவான்கள் மீது உலகத்தனமான ஜனங்களுக்கு தொடர்ச்சியான மறுப்பு இருக்கிறது. உலகத்தாரிடம் சிலர் நீதியை வெறுப்பார்கள். மற்றவர்கள் வெளிச்சத்திடம் தயவின்றி விலகியிருப்பார்கள்; தேவனுடைய பிள்ளைகளுக்கு பாதுகாப்போ அல்லது உதவியோ தரமாட்டார்கள். ஆனால் மற்றவர்களுக்கு அவற்றை கொடுக்க விரும்புவார்கள்.

வருகிற ராஜ்யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் சமாதானத்தை எதிர்பார்க்க வேண்டும். உலகத்தாரிடமிருந்து அல்ல, மற்ற பகுதியிலிருந்து என்பது உண்மை என்று நாங்கள் நினைக்கிறோம். "இந்த உலகத்தில் நமக்கு உபத்திரவம் உண்டு." உலகில் நமது உபத்திரவத்தில் கொஞ்ச பாகம் நாம் மேலும் மேலும் மறுரூபமடைந்திருப்பதால் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில் நாம் வேறு எந்த விதத்திலும் திருப்தியை காண முடியாது. மற்றவர்கள் அதைக் காண்கிறார்கள். நமது முக்கியமான வேலை நமது இயற்கையான ஆசைகளை குறைப்பது ஆகும். நம்மையே எதிர்ப்பது, அதாவது நமது மனித சுபாவத்திற்கு எதிராக போரிடுவது, மற்றவர்களின் தவறான புரிந்து கொள்ளுதல் ஆகியவை சேர்ந்து நமக்கு இந்த உலகத்தில் உபத்திரவத்தை உண்டாக்குகிறது.

### விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுதல்

**கேள்வி:** "திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்ற வசனத்தில் முதற்பகுதிக்கும் இரண்டாவது பகுதிக்கும் உள்ள தொடர்பு என்ன?

**பதில்:** கர்த்தரின் அழைப்பின் மிகவும் குறிப்பிடத்தகுந்த காரியம் நமக்கு முன்னே இருக்கிறது. நாம் தேவனுடைய ராஜ்யவேலையில் அவரது பிள்ளைகளாகவும், உன்னதமானவரின் பிள்ளைகளாகவும், அவரது குமாரனாகிய கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் இருக்கும்படி நாம் அழைக்கப்படுகிறோம். இது தற்கால வாழ்க்கையில் மனிதர்களிடையே மகா கனத்தை கொண்டு வருவதற்கு பதிலாக துன்பத்தையும் உபத்திரவத்தையும் கொண்டு வருகிறது. தேவனுடைய ஜனங்கள் துன்பத்தை பெறுகிறார்கள், ஏனெனில் அவர்கள் தங்களது ஜீவனை தேவனிடம் அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். உபத்திரவம் சாதாரணமாக அவர்களை அதிருப்திக்கு வழிநடத்தி, தேவனுடைய கிருபை அவர்களுடன் இல்லை என்று உணரும்படி செய்கிறது.

எனவே அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவசியமாயிருக்கிறது. உபத்திரவம் உங்களை உற்சாகம் குறையும்படி செய்ய அனுமதிக்கக்கூடாது என்றும், நான் உங்கள் இரட்சிப்பின் அதிபதியாக இருக்கிறேன் என்றும் நமது வசனம் கூறுகிறது; நான் உங்களுக்கு முன்பாக சென்றிருக்கிறேன் என்பதையும் இந்த ராஜ்யத்தில் ஒரு பங்கை பெறுவதற்கு முன்பு நான் அவமதிக்கப்பட்டிருக்கிறேன் என்பதையும் நினைத்துப் பாருங்கள்; நான் பாவமில்லாமல் பாவிகளால் வந்த விபரீதங்களை நான் சகித்ததையும் நினைத்துப்பாருங்கள். இந்த காரியங்கள் வரக்கூடிய ராஜ்யத்தின் மகத்துவத்தை உங்களுக்கு உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். இந்த மகிமைகள் நாம் சகிக்கிற எந்த பாடுகளைக் காட்டிலும் மிகவும் மிஞ்சக்கூடியதாக இருக்கிறது. மேலும் ஒவ்வொரு சோதனை மற்றும் உபத்திரவத்திலும் என்னுடைய உதவியை நீங்கள் பெறுவீர்கள்; ஒவ்வொரு சோதனையிலும் அதிலிருந்து தப்பிக்கும் ஒரு வழியை ஏற்படுத்துவேன். நல்ல போராட்டத்தை போராடு; முடிவு வரை நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருந்தால், மகிழ்ச்சியும் கனமும் மற்றும் சலுகைகளும் உங்களுடையதாக இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். "நாம் தேவனுக்கு முன்பாக ராஜாவும் ஆசாரியராகவும் கிறிஸ்துவுடன் கூட ஆயிர வருடம் இருப்போம்."

### வஸ்திரத்தை யார் அணிவார்கள்?

**கேள்வி :** கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை புது சிருஷ்டி அணிவார்களா அல்லது பழைய சிருஷ்டி அணிவார்களா?

**பதில் :** இதற்கான பதிலை நாம் இரண்டு நிலைப்பாட்டிலிருந்தும் அணுகலாம். உதாரணத்திற்கு, பாவம் செய்யாதிருந்தால் புது சிருஷ்டிக்கு நீதியின் வஸ்திரமே தேவை இல்லை என்று கூறலாம். ஆனால் அபூரணமாக இருக்கும் மாம்சத்திற்கு அதன் கறைகளை மூடுவதற்கு வஸ்திரம் தேவைப்படுகிறது.

பதிலானது சரியாக இருந்தாலும் பழைய சிருஷ்டிக்கு வஸ்திரம் தேவை என்று கூறுவது சரியானதாக இருக்காது. ஏனெனில் வஸ்திரத்தை தரித்திருக்கிறவர்கள், பழைய சிருஷ்டி மரித்து, புது சிருஷ்டியாக மட்டுமே தேவனுக்கு முன்பாக நிற்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். "பழையவைகள் ஒழிந்துபோயின; எல்லாம் புதிதாயின. "(2கொரிந்தியர் 5:17)

ஆகையால் புது சிருஷ்டி மட்டுமே தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரமாகிய கலியாண வஸ்திரம் வழங்கப்படுகிறது. புது சிருஷ்டி தன்னை

மூடிக்கொள்வதற்காக அல்ல. அதன் மாம்சத்தை மூடிக்கொள்வதற்கு இந்த வஸ்திரம் தேவைப்படுகிறது. மாம்சீக சித்தம் மரித்துவிட்டது. ஆனால் மாம்ச சரீரமே தற்காலத்தில் புது சிருஷ்டியின் ஒரே சரீரமாக இருக்கிறது. அது "முதலாம் உயிர்த்தெழுதலில்" புதிய சரீரத்தைப் பெற காத்திருக்கிறது.

"நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்." (ரோமர் 6:11)

**R4764**

## ZIONISM IN PROPHECY
## தீர்க்கதரிசனத்தில் சீயோனிசம்

நமது ஆசிரியர் கடந்த ஜுன் மாதம் "எருசலேம்" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கத்தை கொடுத்துவிட்டு பாலஸ்தீனாவிலிருந்து திரும்பியதை நமது வாசகரில் அநேகர் அறிவர். இந்த பிரசங்கத்தில் அநேக யூதர்கள் ஈர்க்கப்பட்டார்கள். அவர்களில் அநேகருக்கு ஆவல் எழும்பியது. அந்த பிரசங்கத்தை அநேகர் யூத செய்தித்தாள்களில் வெளியிட்டனர். பிறகு ஆசிரியருடன் நேர்காணல் முதலானவை நடந்தது. முடிவாக நியுயார்க் ஹிப்போடிரோமில் யூதர்கள் மத்தியில் ஒரு செய்தி கொடுக்கும்படி மூன்று தாள்களில் கையெழுத்துடன் கூடிய அழைப்பு கொடுக்கப்பட்டது.

அதன்படி அக்டோபர் 9ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஐந்து பிரபலமான எபிரேயர்கள் அடங்கிய ஒரு குழு நமது ஆசிரியரை சந்தித்தது. சகோதரர் ரூதர்போர்டும் உடனிருந்தார். அனைவரும் மோட்டார் காரில் சென்றனர். கூட்டமானது மிகவும் உற்சாகம் அளிக்கக்கூடியதாக இருந்தது. அதில் கலந்து கொண்டவர்கள் நான்காயிரம் பேர் என்று கணக்கிடப்பட்டது. எபிரேயர்கள் இவ்வளவு பேர் நியூயார்க்கில் ஒரே இடத்தில் கூடினதேயில்லை என்று எங்களுக்கு சொல்லப்பட்டது.

சொற்பொழிவு நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கூட்டம் முடியும் போது, "யூதர்களின் நம்பிக்கைகளும் வாய்ப்புகளும்" என்ற கைப்பிரதி விநியோகிக்கப்பட்டது. துரதிருஷ்ட வசமாக அதைப் பெற்ற சில யூதர்கள் தங்களை கிறிஸ்தவர்களாக்க முயற்சிக்கப்படுகிறது என்று தவறாக எண்ணினார்கள். அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்களால் குறிப்பாக கத்தோலிக்கர்களால் யூதர்கள் துன்புறுத்தப்பட்டனர். சிலர் விஷயத்தை சரியாக புரிந்து கொண்டனர். மற்றவர்கள் அவமதிப்பாக கருதினர். கடந்த இலையுதிர் காலத்தில் ஆசிரியர் அங்கு இல்லாத சமயத்தில், ஐரோப்பாவில் இருந்த போது அவர் ஒரு "மிஷினரி" என்று கூறப்பட்டு தாக்கப்பட்டார். யூதர்களின் சிந்தை எல்லாம் தவறான கருத்தில் இருந்தது.

நவம்பர் மாதத்தில் ஐரோப்பாவிலிருந்து நாங்கள் திரும்பி வந்த பிறகு, இந்த தவறாக புரிந்துகொள்ளுதலை முடிந்தவரை யூத பத்திரிக்கைகள் மூலமாக சரிபடுத்தினோம். நாங்கள் "மிஷினரி" வேலை செய்து யூதர்களை கத்தோலிக்கராகவோ அல்லது புரட்டஸ்டன்ட் கிறிஸ்தவனாகவோ மாற்ற முயற்சிக்கவில்லை. நாங்கள் இயேசுவை குறித்துக்கூட அவர்களுக்கு போதிக்கவில்லை. யூதர்களுக்கு எங்களது செய்தியானது ஏசாயா 40:1, 2 லிருந்து "என் ஜனத்தை ஆற்றுங்கள்; தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய் பேசி, அதன் போர் முடிந்தது என்றும், அதன் அக்கிரமம் நிவர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்கு கூறுங்கள்." யூதர்கள், கிறிஸ்தவர்களாக பாஸ்தீனம் திரும்ப வேண்டும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு அல்ல என்று நாங்கள் அறிவித்தோம். மாறாக எருசலேமைப் பொருத்தவரை தேவனுடைய அழைப்பும் வாக்குத்தத்தங்களும் மாம்சீக இஸ்ரயேலருக்கான பூமிக்குரிய வாக்குத்தத்தங்கள் ஆகும்.

மிகவும் ஆழமாக கேட்ட சிலருக்கு எங்களது புரிந்து கொள்ளுதலைப் பற்றி நாங்கள் விவரித்து கூறியதாவது: தீர்க்கதரிசனத்தின் மேசியா ஒரு மாபெரும் ஆவிக்குரிய கூட்டம். அதில் ஆங்கிலேயர், பிரஞ்ச்காரர்கள், ஜெர்மனியர்கள, யூதர்கள் முதலானவர்கள அடங்கிய அநேக அங்கங்கள் இருப்பார்கள். தேவன் இந்த மேசியாவின் கூட்டத்தை சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து பரலோக மகிமைக்கு கூட்டிச் சேர்க்கிறார். அதில் பரிசுத்தமானவர்கள் மட்டுமே இருப்பார்கள். மேலும் நாங்கள் விவரித்து கூறியதாவது: பொதுவாக கிறிஸ்தவர்களும் இன்னும் பொதுவாக யூதர்களும் மேசியாவின் சரீரத்தில் அங்கம் வகிப்பார்கள் என்று நாங்கள் புரிந்து கொள்ளவில்லை. மேலும் யூதர்கள் கிறிஸ்தவ ஜனங்களைப் போல மற்றவர்களுடன் கலக்க மாட்டார்கள் என்பது எங்களது கருத்தாக இருக்கிறது.

அதிலிருந்து அநேக யூத நாளிதழ்கள் நமது கட்டுரைகளை வெளியிட்டார்கள். அதன்பிறகு இன்னும் இரண்டு பெரிய யூத கூட்டங்கள் நடைபெற்றன. இவைகளில் ஒன்று சிகாகோவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை பொருத்தவரை ஏமாற்றத்தை தரக்கூடியதாக இருந்தது. அதில் சனிக்கிழமையாக இருந்தது. அது அவர்களுக்கு அனுகூல மற்றதாக இருந்தது. அநேக யூதர்கள் அதில் கலந்துகொள்ள முடியாததற்கான ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்கள். அது அவர்களது பிரதான வியாபார நாளாக இருந்தது. எனினும் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறாக இருந்தது; நன்றாக கவனம் செலுத்தினார்கள்.

எங்களுடைய கடைசி கூட்டம் பிலதெல்பியாவில் நடந்தது. அது மதசார்பற்ற அச்சகங்கள் மூலம் விளம்பரப்படுத்த -வில்லை. வேறு வார்த்தைகளில் சொல்வோமானால் அது ஒரு யூத கூட்டமாக இருந்தது. கேரிக் தியேட்டரை முழுமையாக நிரம்பி முந்நூறுபேர் நின்று கொண்டிருந்தார்கள். போலீசும் தீயணைப்பு படையினரும் மேலும் வருகிறவர்களை தடுத்ததினால் அநேகர் ஏமாற்றம் அடைந்து நூற்றுக்கணக்கானவர்கள் திரும்பிச் சென்றனர். அந்த கூட்டமானது யூத ஜனங்களும் மிகவும் உற்சாகத்தை கொடுக்கக்கூடியதாக இருந்தது. இப்படியாக ஆசிரியர் மேல் அவர்களது நம்பிக்கை வளர்ந்தது. இந்த விஷயம் அரசியல் விதமாக இல்லாததால் சீயோனிலும் தீர்க்கதரிசன கருத்தில் யூத இருதயங்களை தூண்டியதாக காணப்பட்டது.

R4764

## WHAT CHRIST, AS OUR ADVOCATE, IMPUTES
## கிறிஸ்து நமது பரிகாரியாக எதை சாட்டுகிறார்

நமது மாபெரும் பரிகாரியாக நமது கர்த்தரைப் பற்றி பேசும் போதும் நாம் அவர் மூலமாக நீதிமானாக்கப்பட்டிருக்கிறதையும், பிதாவானவரிடம் நம்மை பிரியமுள்ளவர்களாக ஆக்கும்படி அவர் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்பதை கவனிக்கும் போது, நாம் சில சமயங்களில் பல்வேறு கூற்றுகளை கேள்விப்படுகிறோம். ஒருவர் அவருடைய ஜீவாதார உரிமைகளை சாட்டுகிறார் என்று கூறலாம். இன்னொருவர் தமது நீதியை நமக்கு சாட்டுகிறார் என்று கூறலாம். இன்னொருவர் தமது பலியின் புண்ணியத்தை நமக்கு சாட்டுகிறார் என்று கூறலாம். இந்த காரியத்தை நமது மனதில் தெளிவாக கொண்டுவர முயற்சிபோமாக. எந்த காரியம் நமக்காக உண்மையிலேயே சாட்டப்பட்டது?

முதலாவதாக, கிறிஸ்து நமக்கு சாட்டியது பரலோக சுபாவத்தையோ அல்லது, தெய்வீக ஜீவனையோ அல்லது தெய்வீக ஜீவனுக்குரிய உரிமையையோ அல்ல. இவைகளில் எதுவுமே நமக்கு சாட்டப்படவில்லை. இவைகள் எல்லாம் நமக்கு பிதாவானவரிடமிருந்து வருகிறது. இவைகளுக்காக நாம் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறோம். நாம் புது சிருஷ்டியாக ஆகியிருப்பதின் பலனால் இவைகளுக்கான உரிமைகளை நாம் பெற்றிருக்கிறோம். நமது மாபெரும் பரிகாரியாக நமது கர்த்தராகிய இயேசு நமக்கு செய்வது என்னவென்றால் நாம் பிரியமான பலிகளை அளிக்கும்படி பண்ணுகிறார். ஏனெனில் நமது பலிகள் பிரியமானதாக ஆனால் மட்டுமே, நமது சரீரங்களை நாம் சமர்ப்பிக்க முடியும். இது செய்யப்படுவதால் பிதாவானவர் அவர்களை ஏற்றுக்கொள்ளுகிறார். “அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. ”(ரோமர் 12:1)

இந்த அழைப்புக்கு முதன் முதல் பதிலளித்தவர் நமது கர்த்தராகிய இயேசு என்று நாம் பார்க்கிறோம். அவர், “பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக ”இருந்தார் என்று நாம் பார்க்கிறோம். அவர் தக்க வைத்துக்கொள்ள உரிமை பெற்றிருந்த ஜீவனை கொடுத்தற்கான புண்ணியம் அங்கே இருந்ததை நாம் பார்க்கிறோம். இன்னொரு வகையில். அவரது அடிச்சுவட்டில் நடந்து அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு பலியின் மூலம் தேவனுடன் உடன்படிக்கைக்குள் வருகிறவர்கள் அபூரணர் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகையால் ஜீவனுக்கான உரிமை நமக்கு இல்லை, ஒரு பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமை இல்லை. ஆகையால் நம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தை பலியாக தேவனுக்கு செலுத்த முடியவில்லை. பிறகு நாம் தெய்வீக கிருபையினால் கிறிஸ்துவுக்குள் இழுக்கப்பட்டு, அவர் பெற்றிருந்த புண்ணியத்தை நமக்கு கொடுக்க விரும்பி நமது பலிகளை பிரியமானதாக ஆக்குகிறார் என்கிற நமது நிலைமையை உணருகிறோம்.

நம்முடைய பலிகள் ஒதுக்கிவைக்கப்பட்டு, ஒன்றுமில்லாததாக எண்ணப்பட வேண்டும் என்பது தெய்வீக நோக்கமல்ல. தெய்வீக நோக்கம் அதற்கு மாறாக இருக்கிறது. அது என்னவென்றால்: உன்னிடம் ஏதோ இருக்கிறது, ஆனால் அது அபூரணமாக இருக்கிறது. இப்பொழுது இயேசு உனது பரிகாரியாக தோன்றி, உன்னுடைய பலியை பிரியமானதாக மாற்றக்கூடிய திறமையை பெற்றிருக்கிறார். ஏனெனில் அவரது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணும் வல்லமையை அவர் பெற்றிருக்கிறார். உனக்கு பூரண சிந்தையும் பூரண சித்தமும் இருந்தால், எனது பார்வையில் பலியின் வடிவத்தில் மிகவும் முக்கியமானதாக இருக்க ஆரம்பித்தலை நீ பெறுவாய். நீ உனது முதற்பெற்றோர்கள் மூலம் அபூரணத்தை சுதந்தரித்துக் கொண்டிருப்பதில் முழு கஷ்டமும், இருக்கிறது. உன்னுடைய பலியை எனக்கு பிரியமானதாக ஆக்கும்படி கிறிஸ்து ஏதாவது செய்வார்.

ஆனால் அவர் நமக்காக என்ன செய்வார்? அவர் நமக்கு என்ன கொடுப்பார்? அவரது நீதியை நமக்குக் கொடுப்பாரா? அவர் தமது நீதியை கொடுத்தால் அவர் நீதிமானாக இருக்க முடியாது. அவர் தமது சொந்த நீதியை பராமரிப்பார். பிறகு அவர் நமக்கு என்ன கொடுப்பார்? நீதியைப் பொருத்தவரையில் அவர் முன்னரே பரிசை கொடுத்திருக்கிறார் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். பதினெட்டு (இப்பொது பத்தொன்பது) நூற்றாண்டுகளுக்கு முன்பு நமது இனத்திற்கு நீதியின் தேவையை ஈடுகட்ட அவர் தோன்றினார். நீதியின் தேவை, “ஜீவனுக்கு ஜீவன்” ஒரு மீட்கும் பொருளாக இருந்தது. அவர் தமது ஜீவனை ஒரு சரிசமான விலைக்கிரயமாக கொடுத்தார். எனினும் அந்த ஜீவனை உலகிற்காக இன்னும் அவர் உபயோகிக்கவில்லை. இன்னும் அது அவரது கட்டுப்பாட்டிலும் விநியோகத்திலும் இருக்கிறது. அவர் பரத்திற்கு எழுந்தருளின போது அதன் புண்ணியத்தை சபைக்கு விநியோகிக்கவில்லை. அதாவது கொடுக்கவில்லை. ஆனால் பிதாவானவருக்குள் வர விரும்பினவர்கள் அனைவருக்கும், அவர்களது பலி நிறைவாகவும் முழுமையாகவும் இருக்கும்படி தமது பலியின் புண்ணியத்தை சாட்டுதல் பண்ணினார்.

இதை எப்படி அவரால் பண்ணமுடிந்தது? ஏனெனில் அதை கொடுப்பதற்கு தேவையான அளவில் புண்ணியத்தை பெற்றிருந்தார். முழு உலகத்தின் பாவத்தின் மீட்கும் பொருளாக அதை கொடுக்க தீர்மானித்திருந்தார். ஆனால் அவர் அப்படி செய்வதற்கு பதிலாக அந்த நீதியின் புண்ணியத்தை கடனாக கொடுத்திருக்கிறார். அதன் எல்லா உரிமைகளும், இந்த யுகத்தில் அவரது அடிச்சுவட்டை பின்பற்றும் சீஷர்களாக விரும்புகிறவர்களுக்கு செல்கின்றன. ஆகையால் அவர்கள் இந்த நிலைமையை எடுக்கும் பொழுது, அவர் அவர்களது பரிகாரியாக, அவர்களது சகல குறைகளையும் மூடும்படியாக புண்ணியங்களை கொடுக்கிறார். இந்த அபூரண பலிகளுக்காக கொடுக்கப்பட்ட அவரது புண்ணியம் அவர்கள் ஒவ்வொருவரையும் பிதாவானவருக்கு பிரியமுள்ளவர்களாக ஆக்குகிறது. இப்படியாக சபையின் ஒவ்வொருவரையும், மரணத்துக்குள்ளான அவரது ஞானஸ்நானத்தின் மூலம் அவரது பாடுகளிலும், பாத்திரத்திலும் பங்குள்ளவர்களாக ஆக்குகிறது. பிதாவானவர் அவர்களை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்த பொழுது, அவர்களுக்கு அவர்களுக்காக பரிந்து பேசுகிற பரிகாரி தேவைப்படுகிறார். அவர்களுக்கு தேவையான ஒவ்வொரு சமயத்திலும் அவர்களுக்கு தயாராக நிற்கிறார். அப்போஸ்தலர் கூறுவதாவது: “ஒருவன் பாவம் செய்வானனால், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்.” (1யோவான் 2:1)

### ஒரு மனிதனாக நமது கர்த்தரின் நீதி மற்றும் அவருடைய மானிட ஜீவாதார உரிமை நீதியின் கைகளில்

பிறகு அவர் என்ன கொடுத்தார்? அவர் தம்மை பலியாக கொடுத்த போது அவர் நீதியுள்ள ஒரு மனிதனாக இருந்தார் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். பிறகு அவர் அர்ப்பணம் பண்ணும் போது, அவர் பெற்றிருந்த மானிட ஜீவிய உரிமையையும், நீதியையும் அவர் விட்டு விட்டார். அது நீதியின் கைகளில் இருக்கிறது. இதில் அகில உலகத்திற்குமான ஜீவிய உரிமைகள் உள்ளடக்கியிருக்கிறது. ஒரு மனிதனாக அவரது சொந்த உரிமைகளின் அடிப்படையில் ஆகும். ஆனால் அவர் நமக்கு விட்டுவிடாமல், அவைகளின் பலன்களை நமக்கு சாட்டுதல் பண்ணுகிறார்;.

நாம் ஒரு ஆயிரம் டாலரை பேங்கில் வைத்திருந்தோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் பேங்கரிடம் சொன்னதாவது "இதை உங்களிடம் வைத்திருக்கிறேன். அதை ஒருவருக்காக ஒப்புதல் அளிக்கப் போகிறேன்." அதன்படி நான் அதை உங்களின் ஒப்புதல் அளிக்கிறேன். இப்பொழுது பேங்கில் இருக்கும் ஆயிரம் டாலர் வெறும் பாதுகாப்பு மட்டுமே. நாங்கள் அந்த ஆயிரம் டாலர் நோட்டுகளின் மதிப்பை உங்களுக்காக சாட்டுதல் பண்ணுகிறோம்.

இப்படியாக கிறிஸ்து தமது புண்ணியத்தை நமக்கு சாட்டுதல் பண்ணுகிறார். இதை மகா பெரியவர் அதை கவனித்து அதன்படி செயல்படுகிறவர் நமது பரலோக பிதாவானவர். பிதாவானவர் உடனே பலியை ஏற்றுக் கொள்ளுகிறார். அந்த நபர் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறார். அவரது மாம்சத்தை பொருத்தவரை அது மரித்ததாக கருதப்படுகிறது. கிறிஸ்துவின் இந்த புண்ணியமானது இவர்கள் பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலில் தொடர்ந்து இருக்கும் வரையிலோ அல்லது இரண்டாம் மரணத்திற்கு போகும் வரையிலோ சாட்டப்படுதல் தொடரும். இந்த வழியிலோ அல்லது வேறு வழியிலோ மரிக்கும் பொழுது அவர்களால் பயன்படுத்தப்பட்ட புண்ணியம் விடுவிக்கப்பட்டு வேறு வழியில் உலகிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். அதாவது புது உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழாக, இயேசு கல்வாரியில் பலியிட்ட உரிமைகள் கொடுக்கப்படும்.

நமது பலி ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு பிதாவானவருக்கு அதன் புண்ணியம் போதுமானதாக இல்லை. இதை விளக்குவதற்காக ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். தொண்ணூற்று ஒன்பது அவருக்கு சாதகமாயிருந்தும், ஐம்பது சாதகமாக இருப்பவனைப் போல அவரும் குற்றவாளியாயிருப்பார்.

மனுக்குலம் ஒரு இனமாக இப்பொழுது அதே போலவே இருக்கிறது. நீதியானது ஒரு பூரண பலியைத் தவிர எதையும் ஏற்றுக்கொள்ளாது. ஆகையால் நாம் பூரணத்தில் வேறுபடுகிறோம் என்று கூறலாம். நாம் அதில் இருபத்தி ஐந்திலிருந்து எழுபத்தி ஐந்து வரை இருக்கிறோம் என்று கூறலாம். நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு என்ன செய்யப்பட வேண்டும்? இருபத்தி ஐந்து பாயிண்ட் உள்ளவர்களுக்கு எழுபத்தி ஐந்து பாயிண்ட்டும் பரிகாரியும் கிறிஸ்துவின் புண்ணியமும் தேவைப்படுவது போல எழுபத்தி ஐந்து பாயிண்ட் பூரணம் உள்ளவர்களுக்கும் இருபத்தி ஐந்து பாயிண்ட் தேவைப்படுகிறது. அதிக அளவு தேவைப்படாது. கர்த்தர் முழுதொகையையும் பிதாவானவரின் கையில் வைத்திருக்கிறார். மேலும் அதை தேவைக்கேற்ப பயன்படுத்துவதற்காகவும் வைத்திருக்கிறார். அது இருபத்தி ஐந்து பாயிண்ட் குணலட்சணம் தேவைப்படுகிறவர்களுக்கு இலவசமாக இருப்பது போல எழுபத்தி ஐந்து பாயிண்ட் தேவைப்படுகிறவர்களுக்கு இலவசமாக இருக்கிறது.

சபையின் பலி உலகிற்கு இலவசமாக கொடுப்பதற்கு அல்ல. அதற்கே பலியின் நிலைமைக்கு வருவதற்கு தேவைப்படுகிறது. தேவனுடைய ஏற்பாட்டில், தெய்வீக திட்டத்தில் நமது பலி உலகத்திற்கு தேவைப்படாது. உலகத்தின் பாவத்திற்காக, நீதியின் மீட்கும் பொருளுக்காக தேவைப்படுவது எல்லாம் கிறிஸ்துவின் பலியே.

இந்த எல்லா ஏற்பாடுகளும் நமக்காக மட்டுமே அதன் மூலம் "பரம அழைப்பிற்குள்" நுழைவதற்காகவே ஆகும். உண்மையிலேயே நாம் எதுவுமேயில்லை. ஏனெனில் முழு காரியமும் நமக்காக தேவனுடைய கைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாம் அதில் எதையும் சேர்ப்பதில்லை. நாம் அவருடன் பாடுபடுவதே நமது பலியாக இருக்கிறது; அதன் பலனாக அவருடன் ஆளுகை செய்வோம். "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கு மாத்திரமல்ல. அது நிமித்தமாக பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது." (பிலிப்பியர் 1:29)

ஆனால் தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ ஏதோ ஒரு அர்த்தத்தில் சபைக்கு பரலோக சுதந்தரத்தை வாங்குகிறாரா என்று ஒருவர் கேட்கிறார்.

### எப்படி ஆவிக்குரிய சுபாவம் பெறப்படுகிறது

சபைக்கு கொடுப்பதற்காக கர்த்தர் நோக்கங்கொண்டிருந்த கனம், மகிமை மற்றும் சாகாமை இலவசமாக கொடுப்பதற்கல்ல. இயேசு சபைக்காக தெய்வீக சுபாவத்தையோ அல்லது ஆவிக்குரிய சுபாவத்தையோ விலை கொடுத்து வாங்கவேயில்லை. அவர் வாங்கினது எல்லாம் மனித உரிமைகளையும் மனித சுபாவத்தையுமே ஆகும். இலவசமாக பெறுகிற இதைக் கொண்டு, அவரது புண்ணியத்தின் சாட்டுதல் மூலமாக, அதைப் பயன்படுத்தி, விலைக்கொடுத்து நாம் ஆவிக்குரிய சுபாவத்தை பெறலாம். இது பிதாவானவரின் "பரம அழைப்பாக" இருக்கிறது. பரிமாற்றம் செய்ய, பண்டம் மாற்று செய்ய, நமக்குரிய அனைத்தையும் விட்டுவிட அவர் நம்மை அழைக்கிறார்.

நம்முடைய கர்த்தரின் விஷயத்தில் காரியம் கொஞ்சம் வேறுவிதமாக இருக்கிறது. அதை அவர் பரிசாக பெற்றார். மேலும் அவர் விரும்பியபடி கொடுப்பதற்காக சில குறிப்பிட்ட புண்ணியங்களை வைத்துக்கொண்டார். நாம் அர்ப்பணம் செய்கிறோம். அது கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுவதினால் தேவனுக்கு பிரியமானதாக இருக்கிறது. அது நமது அபூரணங்களை மூடுகிறது. அவரது சரீரத்தின் அங்கங்களாக, ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கங்களாக மனுக்குலத்தை உயர்த்தும் அவரது மாபெரும் வேலையில் ஒரு பங்கை நமது கர்த்தருடன் பெறவும், அவரது ராஜ்யத்தின் மகிமையில் பங்கு பெறவும் அது செய்கிறது.

மேலே நாம் இருபத்தி ஐந்து, எழுபத்தி ஐந்து குணலட்சண பாயிண்ட்கள் என்ற சொற்றொடர்களை பயன்படுத்தினோம். நாங்கள் கொள்கைகள் பலியிடப்பட வேண்டும் என்றோ, நல்ல குணங்கள் பலியிடப்பட வேண்டும், என்றோ நாம் கூறவில்லை. குணலட்சணம் என்ற வார்த்தையை, சரியான நிலைமை என்ற பொருளிலோ அல்லது சரியான மனித குணலட்சணத்தின் மூலகங்கள் என்ற பொருளிலோ நாம் பயன்படுத்தினோம். நாம் எழுபத்தி ஐந்து குணலட்சண மூலகங்களையும் இருபத்தி ஐந்து கலங்கப்பட்ட குணலட்சண மூலகங்களையும் பெற்றிருக்கிறோம் என்று நாம் மனதில்

கொண்டு இந்த வார்த்தைகளை பயன்படுத்தினோம். இதனால் நாம் நம்பிக்கையின்மையை நமது தேவையை உணர்கிறோம். இப்பொழுது இதை நமது கர்த்தர் நமக்கு சாட்டுகிறார். நமது குறைவை நிறைவாக்குகிறார். அது நம்மை பூரண மனிதனாக நிற்கச் செய்கிறது. இதைவிட அதிகமாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை. இதற்கு முன்பு அது அபூரணமான மானிடனாக இருந்தது. கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்பட்ட பிறகு அது ஒரு பூரண புருஷனை அல்லது ஸ்திரீயை அமைக்கிறது.

பிரமாணத்தை கைக்கொள்வதின் மூலமே வாழ்க்கை எப்பொழுதும் அனுபவிக்கப்பட முடியும் என்பதே தெய்வீக விதிமுறை, ஒருவர் நியாயபிரமாணத்தை சரியானபடி கடைபிடிப்பதின் மூலம் நித்திய ஜீவனை அடைய முடியும். “இவைகளை செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்.” (ரோமர் 10:5) தேவன் இந்த நியாயப்பிரமாணத்தை யூதர்களுக்கு கொடுத்திருக்கிறார். அவர்களது நிழலான பலிகள் உண்மையான பாவ நிவாரண பலியை அடையாளமாக காண்பித்தது.

நடுவாக இருந்த சுவர் இடிக்கப்பட்டு அந்த இனத்தின் ஒவ்வொரு அங்கமும் தன்னை பலியில் அர்ப்பணம் பண்ண அங்கே சந்தர்ப்பம் இருந்தது. முழுமையாக இழிவு நிலையை அடையாமல் எல்லாருமே கொஞ்ச அளவுக்கு புண்ணியத்தை பெற்றிருந்தார்கள். எனினும் நியாயப்பிரமாணத்தின் கீழாக ஜீவனை பெற போதுமானதாக இல்லை. விருப்பமான சிந்தையும் நேர்மையான இருதயமும் உடையவர்களுக்கு அவர்களது பலிகள் ஏற்புடையதாக ஆகும்படி கிறிஸ்து தமது புண்ணியத்தை உபயோகிக்கிறார். சிந்தையில் கலகம் உடையவர்களிடம் தேவன் தொடர்பே கொள்ளமாட்டார். அவர்கள் கணக்கிலேயே இல்லை. கிறிஸ்து அவர்களுக்காக பிரசன்னமாகவே இல்லை. அப்படி செய்யவும் அவர் நோக்கங்கொண்டிருக்கவில்லை. தேவனுடன் இணக்கமாயிருக்க விரும்பி, முதலாவது பாவத்தை விட்டு திரும்புகிறவர்களுக்கு மாத்திரமே அவர் பரிகாரியாக நோக்கங்கொண்டிருந்தார். தம்முடைய மனதை முற்றிலுமாக தேவனிடம் அர்ப்பணித்தவர்களிடம் மட்டுமே அவர் தொடர்பு வைத்திருப்பார்.

R4765

## LOVE NOT THE WORLD

## “உலகத்தில் அன்பு கூராதிருங்கள்”

“உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான்.”– யாக்கோபு 4:4

இந்த வசனம் இதற்கு ஒத்து இருக்கிற இன்னொரு வசனத்தை நமக்கு ஞாபகத்துக்கு கொண்டு வருகிறது. “உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.”(1யோவான2:15) இந்த வேத வாக்கியங்களிலிருந்து, உலக ஜனங்களிலிருந்து நமக்கு நண்பர்கள் இருக்கக்கூடாது என்றோ, நம்மையும் அவர்கள் நண்பர்களாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றோ எண்ணக்கூடாது. நாம் யாருக்கும் விரோதியாக ஆகக்கூடாது. ஆகையால் நாம் எல்லோருக்கும் நண்பர்களாக இருக்க வேண்டும்.

நமது கர்த்தர் தாமே தம் வாயினால் கூறிய இன்னொரு வசனத்தை தனது மனதில் பெறாமல், ஒருவர் நமது கர்த்தரின் அப்போஸ்தலர்கள் இருவரின் இந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளக்கூடும். ஆனால் கர்த்தரின் இந்த வசனம் முதலில் மாறானதாகக் காணப்படும். “தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” (யோவான் 3:16) எனினும் இந்த இரண்டும் மாறுபாடானதல்ல. ஆனால் நாம் அதை சரியாக புரிந்து கொண்டால் முழுவதும் இசைவானதாக இருக்கும்.

உலகத்தில் அன்பு கூராதிருங்கள் என்பதையும் உலகத்தை சிநேகியுங்கள் என்பதையும் நாம் எப்படி புரிந்துகொள்ளுவது? இதன் சாவி “உலகம்” என்ற வார்த்தையில் காணப்படுகிறது. உதாரணத்திற்கு, ஒருவன் அரசியலுக்குச் சென்றால், அரசியலானது தீமையோடு பின்னி பிணைந்திருக்கிறது என்பதைப் பார்த்து, தேவனுடனான உறவை நாம் விட்டுக்கொடுக்காமல் அரசியலில் ஈடுபட இயலாது என்பதை உணர்ந்து கொள்ளுவான். கடந்த காலங்களில் அரசியலில் இருந்தால் மட்டும் உலகத்தாரிடம் அதிகமாக இணைந்திருக்கக்கூடும். ஆகையால் பாவ செயல்கள் ஒரு வேளை நேரடியாக அல்ல. மறைமுகமாக இசைந்திருப்பதை இது அர்த்தப்படுத்துகிறது.

அரசியல் காரியங்கள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதை ஒரு சிலரே அறிந்திருக்கின்றனர். அரசியலில் ஒருவன் தன் மனசாட்சியை மறந்துவிடுகிறான். மற்றவர்களுடன் “விட்டுக்கொடுக்க” பலவந்தம் பண்ணப்படுகிறான். இல்லையென்றால் அவன் பிரதிநிதியாக இருக்கக்கூடிய மாவட்டம், வார்டு அல்லது மாநிலம் பிரநிதித்துவத்தை இழக்கும். ஏனெனில் அவன் புறக்கணிக்கப்படுவான். அவன் ஏதாவது சொல்ல விரும்பினால், அது அவனை அரசியலை விட்டு வெளியேற்றிவிடும். அது அவனது வார்டு, மாகாணம் அல்லது மாவட்டத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய ஊழியத்திற்கு எதிராக இருப்பது போல, பொதுவாக உலக காரியங்களை அங்கீகரித்து, இப்பிரபஞ்சத்தின் அதிபதியின் புரட்டு மற்றும் முறைமைகளுக்கு தயவு காண்பிக்க மாட்டார்கள் என்பதே இந்த வசனத்தோடு இணைக்கப்பட்ட பரந்த கருத்தாக இருக்கிறது.

ஒவ்வொரு பிரச்சனைக்கும் ஒவ்வொரு வேலைக்கும் உலகப்பிரகாரமான பக்கம் ஒன்று உள்ளது. இந்த ஏற்பாடுகளோடு நம்மை உறுதிப்படுத்திக் கொள்ளுவதும் அவர்களோடு ஒத்துழைப்பதும் நம் பங்கில் பாவமாக இருக்கும். எனினும் அப்போஸ்தலர் கூறுவது போல நாம் உலகத்தை விட்டு வெளியே போக முடியாது. நாம் உலக ஜனங்களிடம் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஆகையால் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, கர்த்தரின் ஜனங்கள் தேவனுக்கும் அவரது கொள்கைகள் அனைத்திருக்கும் உண்மையாயிருக்கும்படி நாடி சுற்றிலும் நடப்பது சரியான மார்க்கமாக இருக்கிறது. அவர்கள் உலகத்திலிருந்து தங்களை பிரித்துக்கொண்டு உலகமானது அவர்களது நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற பிதாவானவரை மகிமைப்படுத்தும்படி அவர்களது வெளிச்சம் பிரகாசிக்க வேண்டும்.

## நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக யாவருக்கும் நன்மை செய்யக்கடவோம்

உலகம் பாவிகளாயிருக்கும் போதே அவர்கள் மீது அன்பு செலுத்தி, (ரோமர் 5:8)அவர்களை இரட்சித்து பாதுகாக்க தமது பிரியமான இருதயத்தின் சம்பத்தை பலி கொடுத்ததினாலே, உலத்தின் மீதான அப்படிப்பட்ட நன்மையும் அன்பும் நமது பங்கில் அவரது சித்தத்துடன் இசைவில்லாமல் போகாது. உண்மையிலேயே இதுவே வசனத்தின் நேரடியான போதனையாக இருக்கிறது. “ஆகையால் உங்களுக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும் நன்மை செய்யுங்கள்; உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பார்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.” (கலாத்தியர் 6:10; மத்தேயு 5:44-48)

தேவன் உலகத்தை நேசிப்பதுபோல, நாம் அதை நேசிப்பது அப்போஸ்தலர் சபையை எச்சரித்ததற்கு எதிரானது அல்ல. இது ஒரு மாபெரும் மேன்மையான அன்பு. அது மாசுவுடன் ஐக்கியம் இல்லாமல் எப்பொழுதும் அவர்கள் தங்களது பங்கத்திலிருந்து விடுதலையாவார்கள் என்று விழுந்து போனவர்கள் மீது தயவும் விருப்பமும் உடையதாக இருக்கிறது. சமாதானம், சீர்த்திருத்தம் மற்றும் இரட்சிப்புக்கான வழிகளையும் முறைகளையும் அதற்கான சாத்தியக்கூறுகளையும் கவனித்து சகல சுயநல கவனிப்புகளையும் பழிவாங்கும் உணர்வுகளையும் சொந்த விரோதம் மற்றும் பகைகளை கருணையுடன் புறக்கணிக்கும் இந்த அன்பு நமது சமன்பாட்டிற்கு மிகவும் தகுதியானது.

ஆனால் அப்போஸ்தலர் குறிப்பிடுகிற உலகத்திற்கான அன்பு, உலகத்திற்கான நட்பு, ஐக்கியத்தின் அன்பாக இருக்கிறது. அதன் நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் நம்பிக்கைகளாகிய அதன் ஆவியிலே பங்கு பெறுவதையும் அதன் முறைமைகளை பின்பற்றுவதையும் குறிக்கிறது. இந்த உணர்வில் உலகை யாராவது சிநேகித்தால், பிதாவானவரின் அன்பு நிச்சயமாக அவனிடத்தில் இல்லை.

நாம் அழைத்துக்கொண்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகள் மிகவும் உயர்ந்த கிருபைக்கும் அனுகூலத்திற்குமாகும். உயரிய நிலைமைக்காகும். நமக்கு பரலோக பிதாவானவர் தமது திட்டங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார்; தாழ்த்தப்பட்டு அவருடைய ஐக்கியத்தையும் ஊக்கமான ஒத்துழைப்பையும் எடுத்துக்கொள்ள செய்திருக்கிறார். மிகவும் கம்பீரமும், மகிமையும், எதிர்கால கண்ணோட்டத்தில் விரிவானதாக இருக்கிறது. தற்கால காரியங்களை நாம் பார்க்கும் பார்வை வித்தியாசமான வெளிச்சத்தில் உலகத்தாரின் பார்வையிலிருந்து மிகவும் வேறானதாக இருக்கிறது.

ஆகையால் நாம் தற்கால பங்கையோ, ஏற்பாடுகளையோ, முக்கியமான காரியங்களையோ, அதனால் அடையாளம் காணப்பட்டதையோ நேசிக்கக்கூடாது. மாறாக. தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் நேசிக்க வேண்டும். இதற்காகவே நாம், “உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக ” என்று ஜெபிக்கிறோம். நமது பரலோக பிதாவானவர் நேசிக்கிற இந்த உணர்வில் தான் நாம் உலகத்தின் மீது அன்பு செலுத்தவோ, தயவு காண்பிக்கவோ வேண்டும். ஆனால் அந்த ஏற்பாடுகளில் அனுதாபம் கொள்ளக்கூடாது.

தெய்வீக ஏற்பாட்டின்படி, தெய்வீக நட்பு மற்றும் ஐக்கியத்திற்கும் உலக நட்பு மற்றும் ஐக்கியத்திற்குமிடையே சிறந்ததை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். கர்த்தர் நேசிக்கிறவைகள் உலகிற்கு ருசியற்றதாக இருக்கும்.உலகம் நேசிக்கிற தீய கிரியைகள் மற்றும் தீய சிந்தைகள் போன்றவை கர்த்தரால் அருவருக்கப்படுபவைகள். இப்படிப்பட்டவைகளை நேசித்து அப்பியாசப்படுத்துகிறவர்கள் கர்த்தரின் ஐக்கியத்தையும் அவரது ஆவியையும் இழக்க நேரிடும். அவர்கள் உலகின் புறம்பான இருளுக்குள் செல்ல நேரிடும்.

**R4766**

## THE LOVE TO BE DESIRED

## விரும்பப்படத்தக்க அன்பு

“நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாயிருக்கும்படி, ஆவியினால் சத்தியத்துக்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடும் ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்.”- 1பேதுரு 1:22

இந்த வசனத்தில் “ஆத்துமா” என்ற வார்த்தை, வெறும் சரீரத்தை மாத்திரமல்ல, சரீரத்தையும் உள்ளடக்கிய மாம்சீக ஜீவியை குறிக்கிறது. ஆகையால் சுத்தமாக்குதல் என்பது இருதயத்தை (மனம், சித்தம், செயல்படுத்தும் நோக்கம் அல்லது நோக்கங்கள்) முற்றிலுமாக சுத்தப்படுத்துவதைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட சுத்தமாக்குதலின் பலன் வெளியரங்கமான வாழ்க்கையிலும் நடத்தையிலும் வெளிப்படுத்தப்படும்.

நாம் நமது ஆத்துமாவை சுத்தப்படுத்துகிறோம். அதாவது சத்தியத்திற்கு கீழ்ப்படிவதினால் ஆவியின் மூலமாக நமது ஆத்துமாக்கள் சுத்தமாக்கப்படுகிறது. (நாம் பரிசுத்தவான்களாக இருந்தால் சுத்தமாக்கப்படுகிறது) அதாவது நாம் சத்தியத்தை அறிய வேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. எல்லா சத்தியத்தையும் அறிந்திருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் இந்த பாடத்திற்காக மாபெரும் சத்தியத்தை நாம் அறிந்திருக்க வேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. தேவன் பாவத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார் என்பது சத்தியம். சத்தியத்தை அறிந்துகொள்ளவே மனுக்குலத்தின் முழு உலகமும் இந்த ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக வந்தது. உலகத்தின் மேலிருக்கும் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து தப்பிக்கும்படியான ஒரு வழியை தேவன் கொடுத்திருக்கிறார் என்பதை அறிவதே சத்தியம். மேலும் ஒரு குறிப்பிட்ட வழி மட்டுமே இருக்கிறது என்பதை அறிவதே சத்தியம். இந்த தெய்வீக கிருபையை யாரும் பயன்படுத்திக்கொள்ளலாம். அதாவது கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, சிலுவையை எடுத்துக்கொண்டு அவரது அடிச்சுவட்டை பின்பற்றுவதாகும். நாம் நம்மை ஆவியிலும் சத்தியத்திலும் விசுவாசத்தின் மூலம் சமர்ப்பிக்கும் போது நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நாம்

கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக ஏற்றுக்கொள்ளப்பட்டோம். நமது ஆத்துமா பரிசுத்தமாக்கப்பட்டது. நாம் ஒரு புது வாழ்க்கையை ஆரம்பித்தோம்.

நமது வசனத்தில் அப்போஸ்தலர் கூறுவதாவது: சத்திய ஆவிக்கு கீழ்ப்படிதல் மற்றும் அறிவின் மூலம் குணலட்சண மகிமையின் மறுரூபமடைந்து, மாயமற்ற அன்பினால் நாம் சகோதரரை சிநேகிக்க கற்றுக்கொண்டோம். இது உண்மையான அன்பாக, பாசங்கு இல்லாததாக, வெறும் வெளியரங்கமாயிராமல், முகத்தில் புன்னகை பெறுதல் அல்லது கைகளில் இதய பிடிப்பை தருவதாக இருக்கிறது. அந்த ஆவியின் மூலம் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைத்து, அன்பான இரட்சகரிடம் அர்ப்பணம் செய்து, "அவரது வழிநடத்துதலை பின்பற்ற நாடுகிற சகோதரர்களிடம்" இனம் அல்லது நிறம் அல்லது கல்வி அல்லது வறுமை அல்லது இல்லறம் ஆகியவற்றை பார்க்கக்கூடாது. நாம் அனைத்து சகோதரர்களையும் உண்மையாக, மாயமற்ற அன்பினால் நேசிக்கிறோம் என்று உண்மையுடன் சொல்லுகிற அளவுக்கு நமது இருதயம் ஆண்டவரின் ஆவியினால் முழுவதுமாக நிரம்பியிருக்கிற நிலையை நாம் அடைந்திருக்கிறோம்.

இப்பொழுது இப்படியாக நல்ல வழியை பெற்று, அப்போஸ்தலர் இன்னும் முன்னேற்றமான ஒருபடியை காண்பிக்கிறார். அடுத்து நமது இருதயத்தை பரிசுத்தமாக வைத்துக்கொள்ள பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். "சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்." நாம் அவர்களை சகோதரர்களாக கருதுவது மாத்திரமல்ல, "மாயமற்ற அன்பை" செலுத்த வேண்டும். கர்த்தரிடத்தில் நமது உறவு மற்றும் கர்த்தரிடத்தில் அவர்களது உறவின் அடிப்படை கொள்கையை அங்கீகரிக்க வேண்டும். அவர்களும் நம்மைப் போல கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கிறார்கள். இது நமக்கு மாபெரும் தயவையும், அவர்களை உற்சாகப்படுத்தவும் உதவவும் எதையும் செய்ய விருப்பத்தையும் கொடுக்க வேண்டும்.

### பாரபட்சமற்ற அன்பு – தீவிரமானது மற்றும் பலமானது

இந்த அன்பு, சகோதர அன்பு மற்ற அன்பைக் காட்டிலும் வித்தியாசமானது. அது பாரபட்சமற்ற அன்பு; மிகவும் இரக்கமுள்ளது, தீவிரமானது; சகோதரர்களுக்காக ஜீவனையும் நாம் கொடுக்க விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த அன்பு நமது பரலோக பிதாவானவரால் காட்டப்பட்ட அன்பாக இருக்கிறது. நாம் பாவிகளாயிருக்கும் போதே அவர் நம்மீது அன்பு செலுத்தினார். ஆகையால் இயேசுவின் அன்பு சுயநலமற்றது, பரிசுத்தமானது, இரக்கமுள்ளது. நமக்காக நம்நிமித்தம் நன்மை செய்கிற, நம்மிடமிருந்து எதையும் எதிர்பார்க்காத அன்பாக இருக்கிறது.

அப்போஸ்தலர் மேலும் கூறுகிறதாவது: நாம் இந்த அன்பை மட்டும் பெற்றிருந்தால் போதாது. அதை நாம் ஆர்வத்துடனும் அரவணைப்பு மற்றும் தீவிரத்துடனும் செலுத்த வேண்டும். அறை குறையான அலட்சியத்துடனோ அல்ல, பணக்காரன், ஏழை என்றோ படித்தவர்கள், அறியாமையுள்ளவர்கள் என்றோ வித்தியாசம் பாராமல் உண்மையான ஆர்வத்துடன் ஒருவருக்கொருவரின் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். அவர்களில் காணப்படும் குறைகளை நிறைவு செய்ய தேவையான எந்த உதவியையும் நாம் செய்ய வேண்டும். விருப்பத்துடனும் ஞானத்துடனும் அவர்களுக்கு நன்மை செய்யும் நோக்கத்துடனும் இருக்க வேண்டும்.

இது நமது சொந்த அனுபவமாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் பரிந்துரைக்கிறார். இது நாம் அங்கீகரிக்கிற வெறும் கொள்கையாக மட்டுமிராமல், இது நமது சொந்த வாழ்க்கையிலும் நிறைவேற்றப்படுகிறதை நாம் கவனிக்க வேண்டும். நமக்கு எதிராக மீறுதல் பண்ணுகிறவர்களை மன்னிக்கிற பழக்கம், நன்மை செய்கிற மனதை பெற்றிருப்பது இயற்கையானதாக இருக்காது. ஆனால் முழு இனமும் பரம்பரை மூலம் விழுந்து போய் சீரழிந்தது என்ற உண்மையை நாம் நினைக்கும் போது, அது நம்மை அவர்களிடம் அதிக அனுதாபம் உடைவர்களாக ஆக்கும். சிலர் அதிகமாக சீரழிவுக்கு சென்றிருந்தால் நாம் அவர்களுக்காக அதிக அனுதாபம் உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் இந்த திசையில் அனுதாபத்துடன் சிந்திப்பதால், நமது அனுதாப அன்பு அதிகரிக்கும். நாம் அனுதாப அன்பை அப்பியாசப்படுத்துவதால் புது சிருஷ்டி அபிவிருத்தி அடைகிறது.

நமது கர்த்தராகிய இயேசு கூறுகிறதாவது: "நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்." உங்களுக்கு முன்பாக தரநிலையை அமையுங்கள். சகோதரர்களுக்கான நமது அன்பு முதலாவது இந்த கட்டளைக்கு கீழ்ப்படிவதாக இருக்க வேண்டும். நாம் தெய்வீக கட்டளைக்கு கீழ்ப்படிந்து, நாம் பின்பற்றுவதால், நமது அன்பு அபிவிருத்தி அடைகிறது, நமது அனுதாபம் விரிவடைகிறது. இதைப் புறக்கணிக்காதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த அறிவுரையை நாம் கவனிக்கவில்லை என்றால், பிதாவானவர் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிற –வர்களாக இருக்க முடியாது. ஏனெனில் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்க வேண்டுமானால் அவர்கள் அவருடைய நகலாக இருக்க வேண்டும் என்று முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தாகவும் அப்போஸ்தலர் கூறுகிறார். மெய்யான மற்றும் ஆர்வமுள்ள அன்புடையவர் –களாயிருப்பதில் நகலாக இருக்க வேண்டும்.

### கர்த்தரில் அறிவுக்கேற்றபடி அவரில் வலிமை

ஒருவன் அறிவில் வளரவில்லை என்றால், யாரும் கர்த்தரில் வலிமையாக வளரமுடியாது. கர்த்தருடைய வார்த்தையை ஆராய்வதில் உள்ள வைராக்கியத்தின் மூலம் கர்த்தர் மேலும் அவரது சத்தியத்தின் மேலும் உள்ள அன்பை ரூபகாரப்படுத்துகிறவர்களை நாம் மிகவும் அதிகமாக மதிக்கிறோம். அவர்கள் தேவனுடைய ஆழமான காரியங்களில் இன்னும் அதிகமாக வழிநடத்தப்படுவதன் மூலம் தேவனுடனான அவர்கள் தயவு வெளிப்படுகிறது.

எனினும் விசுவாச வீட்டில் பலவீனமானவர்கள் கர்த்தரின் வலிமையில் வளர கவனிக்கப்பட்டு அன்பும் உதவியும் கொடுக்கப்பட வேண்டும். இங்கே அப்போஸ்தலர் இன்னொரு ஆலோசனையை வழங்கி கூறுகிறதாவது: "பலமுள்ளவர்களாக நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களை தாங்க வேண்டும்." (ரோமர் 15:1) அவரது பலவீனத்திலிருந்து விடுபட அவரோடு விவாதித்து அவருக்கு உதவி செய்ய முயற்சிக்க வேண்டும். இதை நாம் சாந்தம் மற்றும் அன்பின் ஆவியில் செய்ய வேண்டும். நமது பொறுமைக்கான சோதனையை சாந்தத்துடன் சகிக்கும்

போது, நம்மையே சந்தோஷப்படுத்த நாடாமல்,பலவீனமுள்ள சகோதரன் அல்லது சகோதரிக்கு உதவ வேண்டும். அப்போஸ்தலர் கூறுவது போல, "நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கு ஏதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்கு பிரியமாய் நடக்கக்கடவன்." அவரது தவறை பெரிதுபடுத்தாமல் நாம் பரவாயில்லை என்று கருதினாலும், அதற்கு எதிராக போராட அவரை அன்பாக தூண்ட வேண்டும். நமக்கு அது அசௌகரியத்தை கொண்டு வந்தாலும் அதை தாழ்மையுடனும் பொறுமையுடனும் தெரிவிக்க வேண்டும்.

இந்த ஆவி, கர்த்தரின் சரீர அங்கங்களிடையே பரவியிருக்குமானால், அனைத்து அங்கங்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பையும் அக்கறையும் பெற்றிருப்பார்கள். நன்மையான யாவற்றையும் ஊக்கபடுத்தவும் பலப்படுத்தவும் நாடுகிற அக்கறையாக இது இருக்கிறது. இது தகுதியற்ற அனைத்தையும் தடை செய்யும். குறையின் மேல் கவசத்தை போடும் அன்பாக இருக்கிறது. பலவீனமுள்ள சகோதரனை மற்றவர்கள் கண்டனம் பண்ண அம்பலப்படுத்துவதைக் காட்டிலும் தவறை மூட முயற்சிக்கும்.

இப்படிப்பட்ட சுய பலியின் அன்புக்கு அடக்கம், தயவு, பொறுமை மற்றும் விசுவாசத்தின் ஆவி எப்படி தேவைப்படுகிறது! நமது ஆண்டவரின் வார்த்தைகள் எவ்வளவு பலமுள்ளவர்களாக இருக்கின்றன. "நீங்கள் (உலக ஆவியிலிருந்து கிறிஸ்துவின் ஆவிக்கு) மனந்திரும்பி (சாந்தம் மற்றும் போதிக்கப்படுதலில்) பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்." (மத்தேயு 18:1-6)

R4767

## CAN EVIL BEFALL THE NEW CREATURE
## புது சிருஷ்டிக்கு பொல்லாப்பு நேரிடுமா?

"பொல்லாப்பு உனக்கு நேரிடாது." (சங்கீதம் 91:10) "பிலாத்து இயேசுவை பிடித்து வாரினால் அடிப்பித்தான்.... அவரை சிலுவையில் அறைந்தார்கள். அவரோடுகூட வேறிரண்டு பேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக சிலுயையில் அறைந்தார்கள்."யோவான்.19:1,18

இந்த வசனங்கள் உலக ஜனங்களுக்கு வெளிப்படையாக முரண்பாடாக இருந்து முற்றிலும் தடுக்கலின் கல்லாக இருக்கிறது. கர்த்தரிடத்தில் விருப்பம் உள்ளவர்களில் சிலர், அவருடைய வார்த்தை மற்றும் திட்டத்தில் அதிக அறிவு இல்லாமல், இந்த வசனங்களை ஒத்திசைக்க முயற்சி செய்து எல்லாவிதமான துன்பங்களையும் அடைகிறார்கள். இவர்களுக்கு தேவனுடைய வார்த்தை உண்மையில்லை என்பதை நிரூபிப்பதாக இருக்கிறது. விசுவாச நிலைப்பாட்டில் இருந்து மட்டுமே அது எப்பொழுதும் உண்மையாகவும் இணக்கமானதாகவும் இருப்பதை அங்கீகரிக்க முடியும். எனினும் விசுவாசத்தின் நிலைப்பாடு எப்பொழுதும் சரியாக அதே மாதிரி இருக்காது. இந்த வசனத்தில் "உனக்கு" என்ற வார்த்தையை கர்த்தருக்கும் (புது சிருஷ்டி) சரீர அங்கங்களுக்கும் (புது சிருஷ்டிகள்) பயன்படுத்த வேண்டும். மாம்சமானது மாபெரும், எதிரி, பெரிய சத்துரு என்று கருதி அதிலிருந்து விடுபட வேண்டும் அல்லது மாம்சத்தை கொஞ்ச காலத்துக்கு நாம் பூலோக கூடாரம் என்று நினைத்து காரியத்தை உருவகமாக எடுத்ததுகொள்ள வேண்டும்.

எனினும் நாம் புதுசிருஷ்டியை மாம்சத்திலிருந்து பிரித்து பார்க்க வேண்டும். "பொல்லாப்பு உனக்கு நேரிடாது." இதை நமது கர்த்தருக்கு பொருத்தி பார்க்கும் பொழுது, புது சிருஷ்டியாக அவருக்கு பொல்லாப்பு நேரிடாது என்று நாம் காண்கிறோம். அவருக்கு நிகழ்ந்த அனைத்து காரியங்களும் தேவையானதாக இருந்தன. இவைகள் இல்லாமல் அவருக்கு கொடுக்கப்பட்ட அழைப்பை அவர் நிறைவேற்றியிருக்க முடியாது. அதே போல நாம் புது சிருஷ்டிகளாக, அவருடைய பின்னடியார்களாக, அவருடைய சிலுவை மரணம் இல்லாமல் இந்த அழைப்பை நாம் அடைந்திருக்க முடியாது. "இவைகளை பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்." (கொலோசெயர் 3:5)

நமது கர்த்தரின் சீஷர்கள் ஓரளவுக்கு அவர்களது நண்பர்களையும் அயலகத்தார்களையும் இழந்திருப்பார்கள். அவர்கள் பூமியின் குப்பையாக கருதப்பட்டிருக்கிறார்கள். முடிந்த அளவுக்கு அவர்கள் எல்லா வகைகளிலும் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த காரியங்கள் அவர்களுக்கு தேவையாக இருந்தது. ஆகையால் அவைகள் தீங்கு இல்லை.

### "அவர்களது இரட்சிப்பின் அதிபதி உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டார்"

"கிறிஸ்து இவ்விதமாய் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா? "என்று நமது கர்த்தர் கேட்டார். (லூக்கா 24:26) நமது கர்த்தர் அழைக்கப்பட்ட ஆசாரிய அலுவலுக்கு நமது கர்த்தர் எல்லா வகையிலும் தகுதியுள்ளவராக நிரூபிக்கப்பட வேண்டும். அவரது விசுவாசம் கெத்செமனே தோட்டத்தில் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. இந்த கடைசி சோதனை முகமுகமாக வரும்வரை அவர் தமது நீதியின் குணலட்சண பலத்தை உணராதிருந்தார். அங்கே அவர் அதிகபட்ச அளவு சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டார். சோதனையின் கீழ் அவரது குணலட்சணம், தெய்வீக கிருபையினால், நிறைவான அதன் மகிமையான பூரணம் எப்பொழுதும் சரியாக இருந்தது.

இப்படியாக பட்ட பாடுகளினாலே, சுயபலியின் தாழ்ந்த ஆழங்களுக்கு தேவனுடைய பூரண சித்தத்திற்கு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். தேவன் இப்படியாக அனுமதித்தார். பூரண குணலட்சண அபிவிருத்தி மற்றும் வெளிப்படுத்தலுக்கும் இப்படிப்பட்ட நிரூபணம் தேவையாயிருந்தது. அது அவர் அழைக்கப்பட்ட மேலான உயர்த்தப்படுதலுக்கு தகுதியாக இருக்கும்.

அதே போல ஆட்டுக்குட்டியானவரின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களானால் நாமும் கூட பாடுபட வேண்டும். சோதனை இல்லாமல் குணலட்சணம் முழுமையாக அபிவிருத்தி அடைய முடியாது. அது ஒரு செடியைப் போன்றது. ஆரம்பத்தில் அது மிகவும் மென்மையாக இருக்கும். அதற்கு தேவனுடைய அன்பாகிய சூரிய ஒளி அபரிமிதமாக தேவைப்படுகிறது. அவரது கிருபையாகிய தண்ணீரும் அடிக்கடி தேவைப்படுகிறது. அவரது குணலட்சண அறிவை பயன்படுத்தி அதிகமாக வளர்க்கப்படுகிறது. அது

விசுவாசத்திற்கு அடிப்படையாகவும் கீழ்ப்படிதலுக்கு உத்வேகத்தை கொடுப்பதாகவும் இருக்கிறது. பிறகு, இந்த சாதகமான சூழ்நிலையில் அபிவிருத்தி அடையும் பொழுது, ஒழுங்குப்படுத்துதலாகிய கிளைக்கழித்தலுக்கு தயாராகிறது. மேலும் சில கஷ்டங்களை சகிக்க வேண்டியிருக்கிறது. அதன் குணலட்சண பலம் கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தி அடைகிறது. சோதனைகள் தீவிரமாக கொடுக்கப்படுவதற்கும் காரணம் பலத்திலும் அழகிலும், மகிமையிலும் அதிகமாக அபிவிருத்தி அடைவதற்கு மட்டுமே ஆகும். முடிவாக அது பாடுபடுவதின் மூலமே நிலைநிறுத்தப்பட்டு, அபிவிருத்தி அடைந்து பூரணபடுத்தப்படுவதற்கே ஆகும். இப்படியாக நாம், "அவருடைய தீர்மானத்தின்படியே அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" என்பதை உணரக் கற்றுக்கொள்ளுகிறோம். அவர்கள் அவருடைய சரீர அங்கங்களாக இருக்கப் போகிறவர்கள். (ரோமர் 8:28)

### மாம்சீக அழிவிற்காக சத்துருவானவனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது

"வாழ்க்கையின் இந்த அனுபவங்கள் புது சிருஷ்டியின் நன்மைக் கேதுவாக நடக்கிறது என்பதையும் எந்த வழியிலும் அந்த அனுபவங்கள் அவர்களுக்கு தீமைக்கு ஏதுவாக நடைபெறாது என்பதையும் நாம் எப்படி காண்கிறோம்" என்று சிலர் கேட்கலாம்.

ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் இரண்டு வகுப்பார் இருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் நமது வசனம் ஒரு வகுப்பாரை மட்டுமே குறிப்பிடுகிறது. மெய்யான மெல்கிசேதேக்கின் முறைமையை, ஆசாரிய முறைமையை குறிக்க, இயேசுவை தனியாகவும் சபையை அவரது சரீரமாகவும் கொண்ட கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது. அவர்களது அன்பிற்கும் பக்திக்கும் பின்னாக அவர்கள் எதையும் வைக்கவில்லை. அவர்களது மாம்சீக சரீரத்திற்கும் நாசகரமான காரியங்கள் நிகழலாம். ஆனால் அவர்கள் தாங்கள் "மாம்சத்திற்கு உட்பட்டவராயிராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள்" என்பதை நினைவுகூருகிறார்கள். வெளிப்புற செல்வாக்கு புதுசிருஷ்டிகளாக அவர்களது ஆசீர்வாதத்தை கெடுக்காது என்பதையும், அவர் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவர்களது கர்த்தரும் தலையானவரின் ராஜ்யத்தின் மகிமையை அடைவதை தடுக்காது என்பதையும் உணருகிறார்கள். அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமானதிற்குள் நுழைந்திருக்கிறார்கள். அதிலிருந்து பின்வாங்கமாட்டார்கள். "அவர்கள் உன்னதமானவரின் மறைவில் இருக்கிறார்கள்." அவர்கள் முடிவுவரை தொடருவார்கள். சகல பொல்லாப்பு அவரை அணுகினாலும், "பொல்லாப்பு உனக்கு நேரிடாது" என்று இந்த வகுப்பாருக்கே உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வகுப்பாரில் இன்னொரு வகுப்பாராகிய "திரள் கூட்டத்தாருக்கும்" சில பொல்லாப்பு நேரிடும். அவர்கள் பெரும் ஆபத்துக்கு உள்ளாக்கப்படுவார்கள். அவர்கள் "பரம அழைப்பின்" சலுகைகளையும் கர்த்தரின் வார்த்தைகளையும் புறக்கணித்தது அவர்கள் செய்த பொல்லாப்பு, இந்த குளிர்ச்சி, அவர்களை சரிபடுத்தக்கூடிய நிலைக்கு கொண்டு வந்தது. "அவர்கள் தந்தையையோ அல்லது தாயையோ அல்லது வீட்டையோ அல்லது நிலத்தையோ" பலியின் உடன்படிக்கையை கைக்கொள்ள தவறும் அளவுக்கு நேசித்தார்கள். ராஜ்யத்தில் ஒரு பங்கை பெற தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள். "கோபாக்கினையின் நாளில்" மகா ஆபத்துக்கு கீழாக கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மாம்சத்தின் அழிவை கொண்டுவருவதற்கு இந்த பொல்லாப்புகள் அவர்களுக்கு தேவைப்படும்.

R4767

## A HOLY NATION PICTURED
## ஒரு பரிசுத்த ஜாதி சித்தரிக்கப்பட்டது

"இவ்விதமான சீரைப் பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது; யேகோவாவைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது." சங்கீதம் 144:15

தேவன் இஸ்ரயேலை தமது ஜனங்களாக ஏற்றுக்கொண்ட சமயத்தில் அவர்களோடு அவர் ஒரு உடன்படிக்கைக்குள் அல்லது ஒப்பந்தத்துக்குள் சென்றார். அவர் அவர்களுக்கு அந்த உடன்படிக்கையின் அடிப்படையாக பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். மோசே மத்தியஸ்தராக இருந்தார். இஸ்ரயேலர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்து இந்த பிரமாணங்களை சரியாக கடைபிடிப்பதாக ஒப்புக்கொண்டனர். அப்படி அவர்கள் செய்தால் தேவன் அவர்களை ஆசீர்வதிப்பதாக ஒப்புக்கொண்டார். நியாயப்பிரமாணத்தில் உள்ள இந்த காரியங்களின்படி செய்து, அவருடைய ஜனங்களாக என்றென்றைக்கும் வாழ வேண்டும், மரிக்கக்கூடாது. அதுமட்டுமல்ல, சகல உலக காரியங்களையும் ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார். அவர்களது வீடுகளிலும் குடும்பங்களிலும், ஆடுகளிலும் மாடுகளிலும் வயல்களிலும் அவர்கள் செழிக்க வேண்டும்.

மற்ற ஜனங்களால் முடியாததைப் போலவே, அதே காரணங்களால் இஸ்ரயேலர்கள் இந்த ஆசீர்வாதங்களை பெறுவதில் தோல்வியடைந்தனர். ஏனெனில் தேவனுடைய நியாயப்பிரமாணம் பூரணமானது, ஒரு பூரண மனிதனின் திறமையின் அளவீடு. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக." தெய்வீக பிரமாணத்தை பூரணமாக கடைபிடிக்க முடியாமல் தங்கள் பிதாக்களைப் போலவும் சகல மனுக்குலத்தைப் போலவும் இஸ்ரயேலர்கள் தொடர்ந்து மரித்தார்கள். அதே காரணங்களினால் இஸ்ரயேலர்கள், போர்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள் மற்றும் வறட்சி ஆகியவைகளை அவர்களது உடன்படிக்கையின் விதிமுறைகளை புறக்கணித்ததால் அனுபவித்தார்கள். (லேவியராகமம் 26:14-33)

## அந்த ஜனம் பாக்கியமுள்ளது

நமது பாடத்தில் தீர்க்கதரிசி தாவீது கர்த்தருடைய பரிசுத்தமான, பாக்கியமுள்ள, ஆசீர்வாதமான ஜாதியை சித்தரிக்கிறார். அது எதிர்கால சித்திரம், கடந்த கால சித்திரம் அல்ல. அது உயர்வான பூரண சித்திரம். மேசியாவின் ராஜ்யம் மனிதர்களிடையே ஸ்தாபிக்கப்படும் போது, சாத்தானின் வல்லமை கட்டுப்படுத்தப்படும் போது, சாத்தான் கட்டப்படும் போது, மனுக்குலம் பாவம் மற்றும் சீரழிவுகளிலிருந்து இழந்ததை திரும்ப கொடுக்கும் ஆசீர்வாதங்கள் மூலம் உயர்த்தப்படும் போது, ஏதேனில் இழந்த தேவனுடைய ரூபம் மற்றும் சாயலுக்கு மனுக்குலம் திரும்ப கொண்டு வரப்படும் போது அது உணரப்படும். கல்வாரியில் நமது கர்த்தரின் பலியின் மூலமாக நமது இனம் இழந்ததை திரும்ப பெற்றுக்கொண்டது.

ஆனால் பாக்கியமுள்ள ஜனம் ஒரு பாக்கியமுள்ள தேசத்தையும் உலகளாவிய பரதீசையும் சுதந்திரமாக பெற்றுக்கொள்ளும். புயல், சூறாவளி, பனிப்புயல், சமுத்திர அலைகள், பூமியதிர்ச்சி பஞ்சம் மற்றும் கொள்ளை நோய்கள் தொடர்ந்தால் மானிட பூரணம் கூட சந்தோஷத்தைக் கொண்டுவராது. கர்த்தருடைய ஆசீர்வாதம் மனுக்குலத்திற்கு மாத்திரமல்ல அவர்களது சகல பூமிக்குரிய வீட்டிற்குமாகும் என்று வேதாகமம் உறுதியளிக்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம். பூமி அதன் பலனை அதிகமாக கொடுக்கும். வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தை போல செழிக்கும். கர்த்தர் அவரது பாத ஸ்தானத்தை மகிமைப்படுத்துவார். (அப்போஸ்தலர் 3:19-21; ஏசாயா 11:9; 65:25; எசேக்கியல் 37; ஏசாயா 35:1; 60:13)

## தீர்க்கதரிசியினால் கொடுக்கப்படும் விவரங்கள்

அந்நிய புத்திரரின் கைக்கு எங்களை நீங்கலாக்கிவிடும் என்று தீர்க்கதரிசி கூறி, எதிர்காலத்தில் பரிசுத்தமான ஜனங்களின் ஆசீர்வாதிக்கப்பட்ட நிலைமையை குறிப்பிடுகிறார். “மாயைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலது கையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்.” (சங்கீதம் 144:11)

தற்கால யுக சபையில் அப்போஸ்தலர் “வேசிப்பிள்ளைகள்” என்று கூறுகிற சில அந்நிய புத்திரர் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் அதே வேலையை செய்தாலும் அதே பாவ அறிக்கை செய்தாலும் “கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.” ஏற்ற காலத்தில் அவர் அந்நிய அல்லது பொய்யான பிள்ளைகளை உண்மையுள்ளவர்களிடமிருந்து பிரித்து, கிறிஸ்துவாகிய மகா மேசியாவின் அங்கங்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக மகிமைப்படுத்துவார். பிறகு பொதுவாக மனுக்குலத்திடம் செயலாற்றும் நேரம் வரும். அது நமது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரமாகும். அப்பொழுது பொதுவாக மனுக்குலம் மேசியாவின் ராஜ்யத்தின் கீழ், பாக்கியமும் பரிசுத்தமும் உள்ள தேவனுடைய ஜனங்களாக ஆவதற்குரிய சலுகையை பெறுவார்கள். அப்பொழுது சாத்தானும் பாவமும் அகற்றப்பட்டு, நீதியும் சத்தியமும் செழிக்கும், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

மகா மேசியா பூமியின் பிதாவானவராக, ஜீவனை அளிப்பவராக, புதிய வாழ்க்கையை அருளுபவராக பொறுப்பேற்றுக் கொள்ளுவார். மனுக்குலம் முழுவதும் கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டு, புதிய வாழ்க்கைக்கான சந்தர்ப்பத்தை பெற்று மனித பூரணத்தையும் தேவ சாயலையும் பெறுவார்கள். எனினும் கொஞ்ச காலத்திற்கு மனிதர்களிடையே அந்நிய பிள்ளைகள் இருப்பார்கள். அவர்கள் சரியான இருதய பொறுப்பு இல்லாமல் அந்த காலத்தின் மகிமையான ஆசீர்வாதங்களை அனுபவிப்பார்கள். இவர்கள் இரண்டாம் மரணத்தில் மரித்து, உலகம் இவர்களிலிருந்து விடுபடும் வரை, நிறைவான சந்தோஷம் மனுப்புத்திரரிடையே இருக்காது. அவர்கள் தவறான ஆவியினால் பெருமை, முட்டாள்தனம் மற்றும் தங்களது வலது கையும், தங்களது மேலான வல்லமைகளையும் வெளிப்படுத்தி, மெய்யான தாவீது ராஜாவாகிய ராஜாதி ராஜனுக்கு அவிசுவாசத்தை காண்பிப்பார்கள்.

## “இளைப்பாறுதலின் காலங்கள் வரும் இயேசுகிறிஸ்துவை அனுப்புவார்”

“அப்பொழுது உங்கள் குமாரர் இளமையில் ஓங்கி வளருகிற விருச்சக்கன்றுகளைப் போலவும், உங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரண்மனை மூலைக்கற்களையும் போலவும் இருப்பார்கள்.” மேசியாவின் பிள்ளைகளின் கிருபையும் அழகும், மானிட இழந்ததை திரும்ப பெறும் ஆசீர்வாதமும் ஆச்சரியமானதாக இருக்கும். (அப்போஸ்தலர் 3:19-21) அவர்கள் ஆதாமின் பூரணத்திற்கு மேலான பூரணத்தை அடைவார்கள். ஏனெனில் அறிவு பெருக்கத்தை அடைந்திருப்பார்கள்.

உங்கள் களஞ்சியங்கள சகலவித வஸ்துகளினாலும் நிறைந்திருக்கும். உங்கள் ஆடுகள் ஆயிரம் பதினாயிரமாக பலுகும். மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வதத்தின் கீழ் பூமி தன் பலனை அபரிமிதமாக்க கொடுக்கும்.

உங்கள் எருதுகள் பலத்தவைகளாக இருக்கும். மாறுதல் ஏதும் இருக்காது. நல்ல உறவில் எந்த முறிவும் இருக்காது. மரணமும் அழிக்கப்படும்.

இனி அலைந்து திரிய வேண்டியதில்லை. இன்னும் சந்தோஷமாக நிலையை தேடவேண்டியதில்லை. நமது வீதிகளில் கூக்குரல் உண்டாகாது. நமது ஆச்சரியமான நாளின் ஆசீர்வாதத்தோடு அதிருப்தியும் மிகவும் வேகமாக அதிகரித்து வருகிறது. மனிதர்களின் மனதிலும் இருதயத்திலும் பாவமும் சுயநலமும் ஆளுகை செய்வதே இந்த கஷ்டங்களுக்கு காரணமாகிறது. மேசியாவின் ராஜ்யத்தின் மாற்றப்பட்ட ஆச்சரியமான நிலைமை, சுயநலம் மற்றும் அதிருப்தியின் இடத்தை சமாதானம், சந்தோஷம் மற்றும் மனநிறைவு எடுத்துக்கொள்ளும்.

தீர்க்கதரிசி ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள் என்று கூறுவதில் ஆச்சரியமில்லை. இப்படியாக யேகோவாவை தெய்வமாக கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது. நமது யோசனைகளை சரிபண்ண வேண்டும், நமது இறையிலை அல்ல. தேவன் தம்மை பொல்லாதவர்களின் தேவன் என்று

ஒப்புக்கொள்வதில்லை. தேவன் தமது வாக்குத்தத்தம் மற்றும் கிருபைகளுக்கு அந்நியர்களையும் புறதேசத்தார்களையும் தவிர தீமை செய்பவர்களை நடத்துவதில்லை. இப்படியாக நமது முழு இனமும் ஆதியிலே பிரிக்கப்பட்டது. ஆனால் தேவ கிருபை "மகா பெரிய ஒரு இரட்சகரை" கொடுத்தது. இந்த இரட்சகர் பரலோக ராஜ்யத்தில் தம்முடன் இருக்கக்கூடிய பரிசுத்தமுள்ள விசுவாசமுள்ள சபையை சமாதானப்படுத்திக் கொண்டார். விரைவில் அவர் தமது பலியின் புண்ணியத்தை சகல மனுமக்களின் சார்பாகவும் உபயோகிப்பார்.

இது முழுவதும் பரலோக பிதாவானவருக்கு பிரியமானதாக இருக்கிறது என்று வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன. பிதாவானவர் இஸ்ரயேல் ஜனங்களுடன் புது உடன்படிக்கைக்குள் செல்வார். அதற்கு மெய்யான மோசேயாகிய மேசியா மாபெரும் மத்தியஸ்தராக இருப்பார். (எரேமியா 31:31) புதிய உடன்படிக்கைக்கு கீழாக மனுக்குலம் முழுவதும், மேசியாவின் ராஜ்யத்தின் ஒழுங்குகள் மற்றும் நியாயத்தீர்ப்புகளுடன் இணைந்த திரும்ப கொடுத்தலின் கீழ்வருவதற்கு சலுகையும் உதவியையும் பெறுவார்கள். நீதியின் ஆளுகையின் ஆயிர வருட யுகத்தின் பலன் மனுக்குலத்தை ஒரு பரிசுத்த ஜாதியாக அல்லது ஜனமாக அபிவிருத்தி அடைவதாகும். சந்தோஷம் நிறைவானதாகவும் நித்தியமாகவும் இருக்கும். இனி துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, மரணமுமில்லை. ஏனெனில் முந்தினவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. (வெளிப்படுத்தல் 21:1-5)

**R4768**

## GENERAL NAAMAN'S LEPROSY CURED

### THE PLAGUE TRANSTENED TO A HEBREW GRAFTER, GEHAZI

## படைத்தலைவன் நாகமானின் குஷ்டரோகம் சொஸ்தமாக்கபட்டது

### இந்த நோய் லஞ்சம் வாங்கிய எபிரேயன் கேயாசிக்கு மாற்றப்பட்டது

2ராஜாக்கள் 5:1-14

"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்;
அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறெருவரும் இல்லை." -ஏசாயா 45:22

இஸ்ரயேலின் வடக்கு எல்லையில் உள்ள சீரியா நாட்டின் படைத்தலைவனாகிய நாகமான் ஒரு வியாதியஸ்தனாக இருந்தான். அவன் அருவருக்கத்தக்க தொற்று நோயும் குணப்படுத்த முடியாததுமான குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டிருந்தான். அவனது செல்வமோ, சபையில் செல்வாக்கோ, வாழ்க்கையின் புகழோ அவனது வியாதியின் பயங்கரத்தை ஈடு செய்யவில்லை. இன்றைய பாடம் தீர்க்கதரிசி எலிசாவினால் ஆச்சரியப்படத்தக்கவிதமாக அவன் குணமாக்கப்படுவதைப் பற்றி கூறுகிறது. நாகமானின் வீட்டில் இஸ்ரயேலிலிருந்து அடிமையாக பிடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு பெண் இருந்தாள். ஆனால் அவள் நல்லபடியாக கவனித்துக் கொள்ளப்பட்டாள் . எலிசா தீர்க்கதரிசியின் தெய்வீக வல்லமையினால் வியாதிகள் சொஸ்தமாக்கபட்டதை அவள் நினைவு கூர்ந்தாள். அவள் தனது எஜமானன் வேதனைப்படுவதினால் சந்தோஷப்படாமல், தீர்க்கதரிசி எலிசாவிடம் சென்று ஏன் வியாதியை குணப்படுத்திக்கொள்ள கூடாது என்று கேட்டாள். தீர்க்கதரிசியிடம் சென்றால் அவர் ஜெபித்து குணப்படுத்துவது நிச்சயம் என்ற கூறினாள்.

இது ஒரு துரும்பை பிடிப்பது போல காணப்பட்டாலும் இந்த யோசனையை நாகமான் பின்பற்றினான். அவன் தனது ராஜாவிடம், இஸ்ரயேலின் மாபெரும் தீர்க்கதரிசி மூலமாக நாகமானின் குஷ்டரோகத்தை குணப்படுத்தும்படி இஸ்ரயேலின் ராஜாவுக்கு கடிதம் தரும்படி கேட்டு வாங்கினான். இஸ்ரயேலின் ராஜா இதைப் பார்த்து திகைத்துப் போனான். குஷ்டரோகம் குணப்படுத்த முடியாத வியாதி என்பதை அவன் அறிவான். ஆனால் அவன் எலிசாவின் வல்லமையை பற்றி அதிகமாக அறியாதிருந்தான். சீரியாவின் ராஜா தன்னிடம் போர் தொடுக்கும் முகாந்திரத்துடன் இப்படி செய்வதாக இஸ்ரயேலின் ராஜா கருதினான். முடிவாக நாகமான் ராஜாவின் நீதிமன்றத்திற்கு தூரத்திலிருக்கிற எலிசாவின் வீட்டிற்கு அனுப்பப்பட்டான்.

இங்கேயும் கஷ்டம் வந்தது. நாகமான், தனது பதவியை மதித்து தீர்க்கதரிசி தனக்காக ஜெபம் பண்ணுவார் என்றும் பலியையும் காணிக்கையையும் செலுத்தி தன்னை சொஸ்தப்படுத்துவார் என்றும் நினைத்தான். ஆனால் இதற்கு பதிலாக எலிசா, அவனை வந்து பார்க்காமல் கூட தனது வேலைக்காரன் மூலமாக படைத்தலைவனை யோர்தான் நதிக்கு சென்று ஏழு தடவை முழுகச் சொன்னான்.

நாகமான் கோபங்கொண்டான். அவன் ஊழியக்காரர்களுடனும் விலையுயர்ந்த வெகுமதிகளுடனும் அநேக நாட்கள் பிரயாணப்பட்டு வந்திருக்கிறான். அவன் ஒரு நாய் ஒரு எலும்புத்துண்டுடன் அனுப்பப்பட்டது போல அனுப்பப்பட்டான். அவன் கோபத்துடன் இரதத்தைப் பூட்டினான். எப்பொழுதும் தெளிவில்லாதிருக்கும் யோர்தான் நதியைக் காட்டிலும் சீரியாவிலுள்ள நதிகள் சிறந்தது இல்லையோ? இப்பொழுது தனக்கு தேவையானது குளியல் அல்ல என்று கூறினான்.

எனினும் ஒரு ஞானமுள்ள ஒரு செய்தி அவனது ஊழியக்காரர்களிடமிருந்து வந்தது. அவர்கள் தீர்க்கதரிசி சொன்னபடி செய்யச்சொன்னார்கள். அது சாதாரண, சுலபமான காரியமாக இருக்கிறது. அதை நிராகரிக்க எந்தவித காரணமுமில்லை. எனினும் நீரில் ஸ்நானம் பண்ணின பிறகு நன்மை நடக்காமல் போய்விடுமோ என்று பயந்தார்கள். ஸ்நானம் பண்ணாமல் அப்படியே திரும்பச் சென்றாலும் அவனது ஊழியர்களும் அவனது சொந்த ஜனங்களும் இஸ்ரயேலர்களும் கேலியாக பேசுவார்கள் என்று நினைத்து,

தீர்க்கதரிசி சொன்னபடி செய்வது என்று தீர்மானித்தான். அவன் யோர்தானில் ஏழுதரம் மூழ்கின போது அவனது குஷ்டரோகம் குணமடைந்தது.

### குஷ்டரோகம் பாவத்திற்கு ஒரு அடையாளம்

அநேக விதங்களில் குஷ்டரோகம் பாவத்தை குறிப்பதாக இருக்கிறது. முதலாவது அது குணபடுத்த முடியாதது; இரண்டாவது அது அருவருப்பானது; மூன்றாவது தொற்றக்கூடியது; நான்காவது அது அழிக்கக்கூடியது; ஐந்தாவது அது வலியில்லாதது.

தெய்வீக வல்லமை மட்டுமே குஷ்டரோகத்தை குணப்படுத்த முடியும். பாவியையும் தெய்வீக வல்லமையே குணப்படுத்த முடியும். வேலைக்காரப் பெண் தீர்க்கதரிசியைப் பற்றி சொன்னது, தீர்க்கதரிசி அதற்கான பரிகாரம் சொன்னது, ஊழியக்காரர்களும் எஜமானனுக்கு எடுத்துக் கூறியது இது எல்லாமே பாவியை குணப்படுத்த, எதிரிக்கும் நற்செய்தியை சொல்வதற்கான தெய்வீக ஏற்பாடு ஆகும். தெய்வீக வார்த்தையின் ஊழியன் அல்லது தேவ ஊழியன், தெய்வீக மன்னிப்பையும் குணமடைவதற்கான சரியான வழியையும் காண்பிப்பார். மற்றவர்கள பாடத்தை பதியச் செய்ய உதவுகிறார்கள். சுகம் கிடைக்க அந்த தனிப்பட்ட நபர் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் அப்பியாசப்படுத்தி தெய்வீக கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும்.

வேதாகமத்தில் எண் ஏழு என்பது முழுமையை அல்லது பூரணத்தைக் குறிக்கிறது. எனவே யோர்தானில் ஏழு தடவை மூழ்கியது முழுமையாக சுத்திகரித்தலை, ஸ்நானத்தை குறிக்கிறது. கவிஞர் இதை குறிப்பிட்டு, பாவிகள் விசுவாசத்தினால் சுத்திகரித்தலை குணமாக்கும் நீரூற்றினால் குணமடைய முடியும் என்று சித்தரித்துக் கூறுகிறார்.

“இரத்தத்தினால் நிறைந்த ஒரு ஊற்று இருக்கிறது,
இம்மானுயேலின் இரத்த குழாயிலிருந்து எடுக்கப்பட்டது,
பாவிகள் அந்த இரத்ததின் கீழ் மூழ்கி,
அவர்களது பாவக்கறைகனை நீக்குகிறார்கள்.”

இப்பொழுது நாம் கிறிஸ்துவின் இரத்தத்தில் கழுவுகிறோம் என்பது விசுவாசத்தினாலேயேயாகும். கிறிஸ்துவின் பலி முழு உலகத்தின் பாவத்திற்காக என்று விசுவாசத்தினாலே உணருகிறோம். அதில் நமது பங்கை பெறுவோம்.

### லஞ்சம் வாங்கிய கேயாசி ஒரு குஷ்டரோகி

மனித மனத்தில் நன்றியுணர்வு என்பது மிகவும் முக்கிய உணர்வுகளில் ஒன்றாகும். படைத்தலைவன் நாகமான் குணமடைந்த பிறகு, அவன் குணமடைந்ததற்காக தீர்க்கதரிசிக்கு நன்றி கூறவும் அவன் கொண்டு வந்த வெகுமதிகளைக் கொடுக்கவும் ஏறக்குறைய நாற்பது மைல் தூரம் அவன் திரும்பி வந்தது அவனது மேன்மையான குணத்தை வெளிப்படுத்தியது. இந்த உயர்ந்த குணம் அவனிடம் இல்லாதிருந்தால் தேவன் அவனுக்கு சுகத்தைக் கொடுக்காமலிருந்திருப்பார் என்று நாம் யூகிக்கலாம். “உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்.”

படைத்தலைவன் ஆச்சரியப்படும் வண்ணம் தீர்க்கதரிசி எதையும் பெற்றுக்கொள்ள மறுத்தார். தேவனுடைய கிருபையின் ஈவு உலக பொருளுக்காக கொடுக்கப்படக்கூடாது. தேவனுடைய ஜனங்கள் அனைவரும் இந்த காரியத்தில் எலிசாவை பின்பற்றினால் தேவனுக்கு எவ்வளவு மகிமையாக இருக்கும்! ஆனால் எலிசாவின் ஊழியக்காரன் ஒரு வித்தியாசமான ஆவியைப் பெற்றிருந்தான். அவன் செல்வம் புரளுவதைப் பார்த்து, தீர்க்கதரிசியை முட்டாள் என்று எண்ணி, “லஞ்சம்” மூலம் கொஞ்சம் செல்வத்தை பெற தீர்மானித்தான்.

நாகமானின் ரதம் சென்ற பிறகு, கேயாசி அதைப் பின்தொடர்ந்து சென்று தனது எஜமானன் எந்த வெகுமதியையும் வாங்கவில்லை என்றாலும் தீர்க்கதரிசிகளின் புத்திரர்களுக்காக வஸ்திரங்களை விருப்பத்துடன் வாங்கிக் கொள்வார் என்று கூறினான். படைத்தலைவன் கேயாசி கேட்டதைக் காட்டிலும் அதிகமாக அவனிடம் கொடுத்தான். ஆனால் கேயாசியின் துரோகத்திற்காக தேவன் தீர்க்கதரிசி மூலம் தண்டித்தார். நாகமானிடமிருந்து வெகுமதியை பெற்றுக்கொண்ட அவன் நாகமானின் குஷ்ட ரோகத்தையும் பெற்றுக்கொண்டான்.

### நாகமான் இரட்சிக்கப்படவில்லை – கேயாசி அதை இழக்கவில்லை

நாகமான் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்கு சென்றான் என்றும் கேயாசி இரட்சிப்பை இழந்தான் என்றும் அநேகர் இந்த பாடத்திலிருந்து தவறாக கருதுகின்றனர். இரண்டு தீர்மானங்களுமே வேதத்திற்கு விரோதமானவை. நாகமான் சுகமடைந்தான். கேயாசி தனது உடல் நலத்தை இழந்தான். ஆனால் இருவருக்கும் நித்திய தீர்ப்பு கொடுக்கப்படவில்லை.

சிலுவைக்குப் பிறகு மூன்றரை ஆண்டுகள் வரை, கொர்நேலியுவின் காலம் வரை எந்த புறஜாதியானும் தேவனுடன் எந்த விதமாக உறவுக்குள்ளும் வரவில்லை. அதற்கு முன்னதாக மோசே காலத்திலிருந்து யூத ஜனங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தார்கள். “பூமியின் எல்லா கோத்திரங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்.” (ஆமோஸ் 3:2) தேவன் இஸ்ரயேலரின் மேல் வைத்த தயவு வெறும் பூமிக்குரியதும் ஆயத்தப்படுத்துகிற ஒன்றாகவும் இருந்தது. இரட்சகரின் பலிக்கு முன்னதாக யாரும் நித்திய ஜீவனை அடையவில்லை. இப்படியாக கிறிஸ்து, “ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்” என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன; மேலும் “முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்ட இவ்வளவு பெரிதான இரட்சிப்பு” என்று கூறுகின்றன.

இயேசுவின் நாட்களிலிருந்து அழியாமை வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டு, “கனம், மகிமை, சாகாமைக்கு” இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுகிற பரிசுத்தவான்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தெரிந்துகொள்ளப்பட்ட அவர்கள் ராஜரீக ஆசாரியர்களாக இருப்பார்கள். அவர்கள் மூலமாக பூமிக்குரிய திரும்பப்பெறும் ஆசீர்வாதங்கள் மாம்சீக இஸ்ரயேலருக்கு திறக்கப்படும். மாம்சீக இஸ்ரயேல் மூலமாக மேசியாவின் மகிமையான ஆளுகையில் சகல ஜனங்களுக்கும் திறக்கப்படும்.

## WHAT "CORRUPT COMMUNICATION" SIGNIFIES
## "கெட்ட வார்த்தை" எதை அடையாளப்படுத்துகிறது

"கெட்ட வார்த்தை உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கும் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள் ." எபேசியர் 4:29

கெட்ட வார்த்தை என்பது நல்லவைகளுக்கு பதிலாக தீமையான செய்தியை பரப்புவதாக இருக்கிறது. சாதாரண உரையாடலின்படி நமது வசனம் ஒரு கெட்ட வார்த்தையை அர்த்தப்படுத்துகிறது. நமக்கு அவைகளின் மேல் கட்டுப்பாடும் குறிப்பிட்ட எல்லைகளும் இல்லாதிருந்தால் நமக்கும் மற்றவர்களுக்கும் எல்லா வகையான கஷ்டங்களையும் நமது மனது கொண்டு வந்துவிடும். ஆனால் நமது நாவுகள் நமது மனதைக் காட்டிலும் இன்னும் அதிகமான தீமையை செய்யும். நமக்கு மட்டுமே தீமை என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பவைகள், நமது நாவுகள் காரியத்துக்குள் வந்தால் நமது மனது மட்டும் தீட்டுப்படுத்தப்படாமல், அது தொற்றாகி பெரும் வெறுப்புக்கு ஆளாகும். ஏனெனில் நாவானது காரியத்தை எல்லா இடங்களுக்கும் பரப்பும், காரியம் உண்மையானதோ அல்லது பொய்யானதோ, அது நேர்மையற்றதாக , அவமதிக்கிறதாக, தொடர்ந்து செல்வதாக சில சமயங்களில் அழியாமல் தொடர்ந்து செல்வதாக இருக்கும்.

உலக ஜனங்களிடையே மாத்திரமல்ல, கர்த்தருடைய ஜனங்களிடையேயும் சிறிய காரியங்களோடு அல்லது சிறிய கருத்துக்களோடு தொடர்புபடுத்தவும் ஒரு போக்கு இருக்கிறது. அது பாவத்திற்குரியதான அவசியம் இல்லாதிருந்தாலும் தீமையானது முளைத்து அபிவிருத்தி அடைய காரணமாக இருக்கலாம். இந்த கருத்தில் தான் கெட்ட வார்த்தை நமது வாயிலிருந்து புறப்பட வேண்டாம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். துரதிஷ்டவசமாக கெட்ட செய்தி நம்மிடம் வந்தால் மேலும் அது செல்லாதபடிக்கு நாம் பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கு தீமையாக நாவுகளை பயன்படுத்துவது சுபாவ மனிதன் குணமா அல்லது கெட்ட ஆவிகளின் வேலையா என்று சில சமயங்களில் ஆச்சரியப்படுவோம்.

அப்போஸ்தலர் கட்டளையிடுவது போல நாம் தீய தொடர்புகளை விட்டு விடுவோமாக; தவிர்ப்போமாக; மேம்படுத்தக்கூடியதை மட்டுமே பற்றிக் கொள்ளுவோமாக. மேம்படுத்தக்கூடியது என்பது கட்டுகிற, ஒருவரையொருவர் கட்டி எழுப்புகிற என்ற கருத்தில் சொல்லப்படுகிறது.

### தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை பற்றிய உரையாடல் பரந்த நோக்கம்

கர்த்தரை நேசித்து அவரது அடிச்சுவட்டில் நடக்க முயற்சிப்பதாக கூறுகிறவர்கள் சொல்லுவதாவது: "நான் சத்தியத்தை தவிர எதையும் பேசமாட்டேன்; யாருக்கும் தீமை செய்யமாட்டேன்; அண்டை வீட்டார் உள்ளே வரும் போது நான் ஏதாவது பேச விரும்பி, மத காரியங்களில் அவர்களுக்கு ஆவல் எற்படுத்த பேசினால் அது அலுப்பாக இருக்கிறது என்று நினைப்பார்கள்." ஆனால் அவதூறு பேசுவதும் தீமை பேசுவதும் ஒன்றுதான். ஆனால் புரளி பரப்புபவர்கள் சாதுரியமான முறைகளையும், வார்த்தைகளையும் பயன்படுத்துவார்கள்; கேட்கிறவர்களுக்கு கருணை காட்டுவது போல பேசுவார்கள். ஆனால் அது தீமை பயக்கும். கேட்பவர் விழுந்து போன மானிட சுபாவத்தின் சக்தியினால் வெளியே சென்று இந்த அவதூறை மற்றவர்களுக்கு சொல்ல தூண்டப்படுவார்கள். விழுந்துபோன சுபாவம் இப்படிப்பட்ட காரியங்களில் விருந்துண்டு களிப்படைகிறது. இப்படியாக அறநெறியையும் பாவத்திற்கு எதிராக போதிக்கிற அநேகரையும் ஏமாற்றுகிறது. இப்படியாக மற்றவர்களின் மீறுதல்களை மறைமுகமாக கண்டனம் பண்ணுகிறார்கள். அவர்களே வெறுக்கத்தக்க காரியங்களையும் குறிப்பிடுகிறார்கள். ஐயோ! அவர்களது விளக்கம் ஆபத்தான குறைபாடுள்ளதாக இருக்கிறது. அப்பொழுது கர்த்தருடைய நீதியான ஆலோசனை அசட்டை பண்ணப்படுகிறது.

தெய்வீக வார்த்தையில் தெரிவிக்கப்பட்டுள்ள நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தைக் குறித்து கிறிஸ்தவ ஜனங்களிடையே உரையாடுவது பரந்த நோக்கம் உடையதாக இருக்கிறது. இவைகளில் உண்மையிலேயே கேட்கிறவர்களுக்குமாத்திரமல்ல ஊழியம் செய்கிறவர்களுக்கும் கிருபை சேருகிறது. புது சிருஷ்டியைப் பொருத்தவரை எல்லா வகைகளிலும் அது ஆசீர்வாதத்தை பொழிகிறது. மேலும் பழைய சுபாவத்தின் தீய ஆசைகள், சுவைகள் மற்றும் ஆவல்களை அழிப்பதற்கு உதவுகிறது.

அப்போஸ்தலர், "கர்த்தருடைய ஜனங்கள் தங்களை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும்" என்று சொன்ன பொழுது அவர் தனது மனதில் இதைத்தான் வைத்திருந்தார் என்பது தெளிவாகிறது. அன்பின் ஆவி, தேவனுடைய ஆவி, சத்திய ஆவி ஆகியவை நிரம்பி வழிகிற இருதயம் அதை மற்றவர்களுக்கும் கொடுப்பது நிச்சயம். ஏனெனில், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்;" "இருதயத்தில் சுத்தமுள்ளவர் பாக்கியவான்கள்." (1பேதுரு 2:9; மத்தேயு 12:34; 5:8)

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.
வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**